விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 10 புதன்கிழமை (23.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பொலிஸார் கைது செய்வோரை

# 48 மணிநேரம் தடுத்து வைக்கும் சட்டம் நிறைவேற்றம்!

(கொழும்பு)

பிடியாணையின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை 48 மணித்தியாலம் தடுத்து வைக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 110 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக 33 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இந்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## வரவேற்பு நிகழ்வுக்கு சட்டத்தரணிகள் இல்லை

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை வரவேற்கும்நிகழ்வுகளில் இலங்கைசட்டத்தரணிகள் சங்கம் பங்கேற்காது என அறிவித்துள்ளது. நீதியரசர் மொஹான் பீரிஸை வரவேற்கும் விசேட நிகழ்வொன்று இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

உச்ச நீதிமன்றக் கட்டடத்தொகுதியின் பிரதான மண்டபத்தில் இன்றைய தினம் காலை 10 மணியளவில் இந்த வரவேற்பு வைபவம் நடை (20ஆம் பக்கம் பார்க்க)

## பேருந்துக் கட்டணம் அதிகரிக்கும்!

(கொழும்பு)

நாட்டில் தனியார் பேருந்துகளின் கட்டணங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பிற்கு ஏற்ற வகையில் இந்தக் கட்டணங்கள் 6 வீதம் தொடக்கம் 8 வீதம் வரையில் அதிகரிக்கப் படவுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தல்கள் குறித்து அமெரிக்கா அக்கறை

(கொழும்பு)

அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை வெளிப்படுத்திய சிவில் சமூக நிறுவனங்கள், ஆர்வலர்கள் மற்றும் சட்டத்திற்காக குரல் கொடுப்போருக்கு எதிராக தொடர்ந்தும் நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கரிசனை கொண்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமையானது பிரபஞ்சத்துக்கு உரித்துடையது என்பதுடன் அது இலங்கை சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை உரிமையை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஷிராணி பண்டாரநாயக்கவை படுகொலை செய்வதற்கு திட்டம்

### ஜோன் அமரதுங்க கேள்வி

(கொழும்பு)

காட்டு ஆட்சியும், காட்டுச்சட்டமும் நடைமுறையில் இருக்கின்ற இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு இடம் பெறுமா என்பது சந்தேகம் எழுந்திருப்பதாக எதிர்க் கட்சியின் பிரதமகொறடாவான ஜோன் அமரதுங்க எம்.பி நேற்று சபையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் பாதுகாப்பினை அகற்றியிருப்பதன் மூலம் அவரைக் கடத்துவதற்கு அல்லது படுகொலை செய்வதற்கு திட்டம் இருக்கிறதா? என்று சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்பிக்கப்பட்ட குற்றவியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## லொறி மோதி விபத்து இலங்கையர் மூவர் பலி

(சென்னை)

தமிழ்நாட்டின் புதுவை அருகே உள்ள அனுச்சைக் குப்பம் பகுதியில் இடம்பெற்ற வாகனவிபத்தில் அகதிமுகாமில் வசித்து வரும் மூவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுச்சைக் குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் முகாமில், அஜன் (வயது 21), சாருஷாஜன்(வயது 20) ஆகியோர் தங்கியிருந்தனர். இந்த ஊருக்கு அருகே உள்ள நம்பிக்கை நல்லூரைச் சேர்ந்தவர் சதீஷ் (வயது 24) (20ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத்திட்டத்தை முன்வைக்க கூட்டமைப்பு ஒத்துழைக்கவில்லை

### அமைச்சர் பீரிஸ் இந்தியாவில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முனைப்புகளுக்கு தமிழ்தேசியக்கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நிறுவப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரப் பகிர்வினை வழங்குவது குறித்து கவனம் செலுத்த முடியும்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கூட்டணிக் கட்சிகள் 13ஆம் திருத் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறிதரன் எம்.பியின் அலுவலகம் மீண்டும் சோதனைக்குட்பட்டது

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அலுவலகம் நேற்று மீண்டும் குற்றப்பிரிவு பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப் பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள அலுவல்கத்தில் நேற்றுக்காலை 9:30 மணி தொடக்கம் பிற்பகல் 1:30மணிவரையிலானநான்குமணித்தியாலங்கள் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சோதனையின் போது குற்றப் புலனாய்வு பிரிவினர் அலுவலகத்தில் பாவனையிலிருந்த கணணி ஒன்றையும் எடுத்துச்சென்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

அத்துடன் அலுவலகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினரை சந்திக்க சென்றிருந்த பொதுமக்களிடம் சி.ஐ.டியினர் விசாரணைகளை நடத்தியிருந்தாக அறியவந்துள்ளது.

அதே வேளை கடந்த வாரம் குறித்த அலுவலகத்தில் சோதனை நடைபெற்ற வேளை பாராளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த

## பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நேற்று பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நான்கு பேரில் இருவர் நேற்றைய தினம் வவுனியாவில் வைத்து துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது வணிக முகாமைத்துவ பீடாதிபதி திவேல்நம்பியும் உடன் இருந்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் முகாமைத்துவ பீட மாணவனுமான வி.பவானந்தன், விஞ்ஞானபீட மாணவனான எஸ்.சொலமன் ஆகியோரே நேற்று விடுதலை செய்யப்பட்டு உள்ளனர். இவ்விரு மாண வர்களும் துணைவேந்தரின் வேண்டுகோளுக் கிணங்க வெலிகந்தையிலிருந்து அழைத்து வரப்பட்டு வவுனியாவில் வைத்து அவர்களின் பெற்றோர் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தபால் மூலம் -

# ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**2013 January- 2013 June**

24

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2213) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013





# இலங்கையரின் புகலிட அந்தஸ்து இரத்து

(கொழும்பு)

எம் வி சன் சீ கப்பல் மூலம் கனடாவிற்கு அடைக்கலம் கோரி சென்ற இலங்கையர்களில் ஒருவரது புகலிட அந்தஸ்து மீளப் பெறப் பட்டுள்ளது.

492 பேரை உள்ளடக்கிய சன்சீ கப்பல் 2010 ம் ஆண்டு ஆகஸ்ட் 13-ம் திகதி கனடாவைச் சென்றடைந்தது. இதில் 180 ஆண்களும் 63 பெண்களும் 49 சிறுவர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரத்தில் 50 பேர் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். 63 பேர் தமது கோரிக்கையை மீளப் பெற்றுக் கொண்டார்கள். 25 பேருக்கு எதிராக நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் 16 பேருக்கு நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், சன்சீ கப்பலில்சென்றவர்களில் புகலிடக் கோரிக்கை அந்தஸ்து வழங்கப்பட்ட ஒருவரிமிருந்த அந்த உத்தரவு மீள பெறப் பட்டுள்ளது. (எ-11)


# பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

**25% கழிவு**

இன்றைய விசேட உணவு :-

**பூரி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

**சப்பாத்தி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829





# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இன்று பிறந்தநாளைக் கொண்டாடும் எமது கிராம அபிவிருத்திக்கென தன்னாலான பங்களிப்பைச்செய்து கொண்டிருப்பவரும் UR Foundation இன் பிரதம இயக்குநருமாகிய

**உயர்திரு. க.செவ்வேள்**

அவர்களை

இன்றைய நன் நாளில் அவரை மேன்மேலும் பல சிறப்புகள் பெற்று நீண்டகாலம் சேவையாற்றவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

- அல்வாய் மனோகரா மக்கள்



# மணி விழா நாயகனை வாழ்த்துகிறோம்




(சி-2220)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் **திரு.க.கனகராசா** அவர்கள் மணி விழாக் காணுவதையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி அலோசியஸ் குடும்பம்



# மணிவதனன், ஜெயச்சித்திரா சகோதரர்களின் 18-ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் கலைப்போட்டிகள்

# ராசி கலக்சன்

(முகூர்த்த பட்டாடைகளின் சமுத்திரம்) ஆதரவில்

**சிறந்த பாடகன், பாடகிகளை தெரிவு செய்யும் சுப்பர் சிங்கர் (தேனிசை மழை) போட்டி நடத்தப்படவுள்ளது.**



இப்போட்டி ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித் தனிப் போட்டியாகவும் 9 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்கட்கு தனிப்போட்டியாகவும் நடைபெறும்.



அத்துடன் பாட்டுக்கு பாட்டு, அறிவிப்பாளர் தெரிவுப் போட்டியும் நடைபெறும்.

வெற்றி பெறுபவர்களுக்கு சிறந்த பரிசில்கள் காத்திருக்கிறது.

நீங்கள் செய்யவேண்டியது கடிதத்தில் உங்கள் பெயர், வயது, நீங்கள் பங்குபற்றும் நிகழ்ச்சி, தொலைபேசி இலக்கம், முகவரி ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழ்வரும் முகவரியில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்பி வையுங்கள்.



**விண்ணப்ப முடிவு திகதி : 01.02.2013**



ராசி கலக்சன்
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5571

V.S.சற்குணன்
25, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 222 7535

(சி-221)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**
**BBM ON LINE DEGREE PROGRAMME**

**VACANCY**

Immediate engagement an Institutional Moodle Administrator on contract basis for one year to handle Moodle Learning management System in the faculty of Management Studies & Commerce, university of jaffna for the BBM online Degree Programme.

**POST OF MOODLE ADMINISTRATOR**
**Reguirements:**
The candidate should posses the following:

- A relevant Degree from a recognized University.
- Excellent written & verbal communication skills in English.
- Experience with online Learning and the Moodle LMS at the Administrative Level.
- Highly organized and detail oriented personality.
- Ability to self-direct and manage one's time.
- A demonstrated ability to plan and manage complex projects.
- Knowledge in Windows / Unix programming.
- Knowledge in btml codes, Data Base Programming scripting languages (php/asp) i s desirable.

Salary: Rs.30,000/- Fixed per month.

Age: Below 35 years.

Application together with names and addresses of two referees should be forwared within 07 days of this advertisement to **The Registrar, University of Jaffna.**

REGISTRAR
University of Jaffna,
Jaffna.
22.01.2013.

(N-2016)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆயுளின் எதிரிகள்

"மனிதனுக்கு ஆயுள் நூறு வருடங்கள் என்று சொல்லுகிறார்கள்... ஆனாலும் அதிகம் பேர் பூரணமாக ஆயுள் முழுவதும் வாழ்வதாகத் தெரியவில்லை.

இது ஒரு சந்தேகம். இதே சந்தேகம் திருதராஷ்டிரனுக்கும் வந்தது.

உடனே திருதராஷ்டிரன் விதுரனைப் பார்த்துக் கேட்கிறான்.

''ஏன் இப்படி... யாருமே பூரண ஆயுள் வாழ்வதில்லையே'' இதற்கு விதுரர் பதில் கூறுகிறான்.

''ஆறு கூரிய வாள்கள்... மனிதனுடைய ஆயுளை அழிக்கிறது'' என்றார்.

அது என்ன ஆறு கூறிய வாள்கள்?

அவரே கூற ஆரம்பிக்கிறார்; அதிக கர்வம், அதிகமாகப் பேசுவது, தியாக மனப்பான்மை இல்லாமை, கோபம், சுயநலம், நண்பர்களுக்குத் துரோகம்– இவைதான் ஆயுளை வெட்டக்கூடிய கத்திகள்.

அதிக கர்வம் என்ற வாள் ஒரு முக்கியமானது.

தான் கெட்டிக்காரன். தன்னிடம் அதிகம் பணம் உள்ளது. தன்னாலேதான் அனைத்தும் நிறைவேறுகிறது. இப்படியெல்லாம் நினைப்பது பிழை... "நான்" என்ற கர்வம் கூடாது. அழிவிற்குக் காரணமாக மாறி விடுகிறது.

இரண்டாவது அதிகம் பேசுவது. அதாவது வீண் வம்பை விலைக்கு வாங்குவது.

அது இடைஞ்சலைக் கொண்டு வந்து விடும். நமது பேச்சு கடுமையாக இருக்கக்கூடாது.

உண்மையானதாக இருக்க வேண்டும். பிரியமானதாக இருக்க வேண்டும். நன்மையைக் கருதியதாக அமைய வேண்டும். அதுதான் நல்லதாகும்.

மூன்றாவது விடயம்; அனைத்தையும் நாம்தான் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை. ஆசை அதிகரித்துத்தான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவதில்லை. பிறருக்கு உதவுவதற்காகத்தான் நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம். இதை உணர்ந்தவர்கள் தியாக மனப்பான்மை கொண்டவர்கள்.

அடுத்த படியானது கோபம்; ''கோபம்'' தான் மனிதனுடைய முதல் எதிரி.

கோபத்தை வென்றவன்தான் யோகி. கோபத்திலே இருக்கிறவனுக்கு தர்மம் எது– அதர்மம் எது என்று தெரியாது. அந்த விவேகத்தை இழந்து விடுவான். பாவம் செய்ய ஆரம்பித்து விடுவான். அதனாலே கோபப்படாமல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் கோபப்பட்டால் அதை நாம் சகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

அடுத்தது ''சுயநலம்''– சுயநலம்தான் அனைத்துத் தீமைகளுக்கும் காரணமாக அமைகிறது.

தங்களது காரியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக எந்தப் பாவத்தையும் செய்ய துணிந்து விடுகிறோம். இப்படியானவர்கள்தான் சுயநலவாதிகள்.

அயலவர்களின் சந்தோஷத்தைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வேண்டும். மற்றவர்களின் துன்பத்தில் பங்கேற்க வேண்டும். இப்படியாக இருந்தால் சுயநலம் போய் விடும்.

ஆறாவது விடயம்; நண்பர்களுக்குத் துரோகம் செய்வது. இவ்வுலகில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அபூர்வம். அப்படியிருக்கும் போது அவர்களுக்குத் துரோகம் செய்ய நினைப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்.

யாரிடமும் நாம் சிநேக மனப்பான்மையுடன் பழக வேண்டும். கருணை காட்ட வேண்டும்.

இந்த ஆறு விடயங்களிலும் சற்று கவனமாக இருந்தால், வெற்றிகரமான வாழ்க்கை நிச்சயம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியாகும்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தினூடாக பரீட்சார்த்திகள் தமது பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அன்றைய தினமே அனைத்து பாடசாலைகளுக்கும் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இப் பரீட்சையில் இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்து 535 பாடசாலை பரீட்சார்த்திகளும் 15 ஆயிரத்து 239 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றினர்.

இவர்களில் பழைய மற்றும் புதிய பாடத் திட்டங்களுக்கமைய இரு சாராருக்கும் வெவ்வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்ச்சியாக 100 நாட்களுக்கு மேற்கொண்டிருந்த பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் காலதாமதமாகின.

இருப்பினும் கல்வியமைச்சினதும் பரீட்சைகள் ஆணையாளரினதும் வேண்டுகோளுக்கிணங்க விடைத்தாள் திருத்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு மூன்று கட்டங்களில் அவை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசாங்க கட்டடங்களில் தேசியக்கொடி பறக்க விடவும்

(கொழும்பு)

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி 3, 4 ஆம் திகதிகளில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் தேசியக் கொடிகளைப் பறக்க விடுமாறு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் மின்குமிழ் அலங்காரங்களை மேற்கொள்ளுமாறும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பி.பி. அபேகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றைப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளதுடன் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இதன்மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சகல மட்டச் செயலாளர்களுக்கும் மேற்படி சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி. அபேகோன் தெரிவித்தார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 65 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 220 |
| தக்காளி | 80 | 100 | 140 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 30-35 | 30 | 50 | 40 |
| கோவா | 50-60 | 80 | 120 | 120 |
| கரட் | 100 | 120 | 160 | 160 |
| பூசணி | 30-40 | 30 | 50 | 50 |
| புடோல் | 80 | 120 | 120 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80-140 | 120 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 240 | 190 | 280 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 160 |
| லீக்ஸ் | 110-120 | 110 | 160 | 150 |
| பீற்றூட் | 70-80 | 80 | 140 | 140 |
| கறிமிளகாய் | 200 | 300 | 280 | 220 |
| முருங்கைக்காய் | 250-300 | 600 | 600 | -- |
| போஞ்சி | 140-160 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 280 | 240 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 30-40 | 90 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 90 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 150-160 | 240 | 100 | 100 |

# இராசி பலன்

23.01.2013

(தை 10, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

துவாதசி பின்னிரவு 5.59 மணிவரை

ரோகினி காலை 8.36 மணிவரை

இராகுகாலம் 12.36-2.06 மணிவரை

சுபநேரம் 5.06-6.36 மணிவரை

**மேடம்** யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**இடபம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்கள் ஏற்படலாம், பல நாட்களாக பார்க்காமல் இருந்த ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்களால் சஞ்சலங்கள் ஏற்படலாம், பண விரயங்கள் அதிகரிக்கும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்** விலையுயர்ந்த பொருட்கள் வாங்கும் நிலை உருவாகும், அதிர்ஷ்டகரமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், முன்னேற்றத்திற்கு வழி காட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், பெரியோர் சந்திப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**துலாம்** எதிலும் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் வெற்றியடைய வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பாடுபட்டதற்கேற்ப இன்று பலன் கிடைக்கும், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடமே வந்து சேரலாம்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** இழுபறியாக இருந்த பிணக்குகளில் முன்னேற்றம் தென்படும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளியலறை ஊடாக நுழைந்து திருட்டு

## பல இலட்சரூபா பெறுமதியில் உடைமைகள் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

வீட்டின் உரிமையாளர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதனை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் குளியல் அறையூடாக உள் நுழைந்த திருடர்கள் தங்கள் கைவரிசையினைக் காட்டிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு சிவப்பிரகாசம் வீதி குளக்கரை ஒழுங்கையில் அமைந்துள்ள கதிர்காமநாதன், என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சங்கிலி, காப்பு உட்பட ஐந்து பவுண் நகையும் ஐம்பது ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் பெறுமதியான மடிக்கணனி ஒன்றினையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். யாழ்ப்பாண பொலிஸார் இத்திருட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அண்மைக்காலமாக இது போன்ற திருட்டுச் சம்பவம் நாளுக்கு நாள் அடிக்கடி யாழில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

நன்றி:- ஜலன்ட்



# மீன்பிடிக்கு அனுமதியற்ற

# வடபகுதி கடற்பரப்பிற்குள் தென்பகுதி மீனவர்கள் எப்படி?

(யாழ்ப்பாணம்)

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினையை இங்குள்ள அரசியல்வாதிகள் அரசியல்மயப்படுத்தி அதில் தம்முடைய நலன்களினை தேடுவதனால்தான் இவ்விரு நாட்டின் மீனவர்களினுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக தென்னிலங்கை மீனவர்களின் வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறலினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதலில் உள்நாட்டில் காணப்படும் முரண்பாடுகள் தீர்க்கப்படல்வேண்டும். அதன்பிற்பாடு அயல்நாட்டின் அத்துமீறலுக்கு எதிராக நாம் அனைவரும் நடவடிக்க்கை எடுக்கமுடியும் எனவும் கூறினார்.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விலக்களித்து அதற்கான தீர்வினை முன்வைக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்று நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் றுகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் தலைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

இந்திய- இலங்கை மீனவர்களினுடைய பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கி அதில் இங்குள்ள அரசியல்வாதிகள் சிலர் ஆதாயம் தேடிக்கொண்டுள்ளனர்.

தற்போது இம்மீனவர்களின் முரண்பாடுகளினை தீர்த்துவைப்பதில் பல்கலைக்கழகங்கள் ஆர்வம் கொண்டுள்ளதனால் விரைவில் தீர்வொன்றினை எட்டிவிடமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கில் 2ஆயிரம் ரோலர்கள் மீனவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது அரசியல் பின்னணியிலேயே இடம்பெறுகின்றது.

இதனைவிட தென்னிலங்கை மீனவர்களும் வடபகுதி கடற்பரப்பிற்குள் எம்முடைய மீனவர்கள் சுதந்திரமாகச் செல்லமுடியாத இடங்களுக்குக்கூட இராணுவத்தினரின் அனுசரணையோடு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இவற்றினைக்கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

வடபகுதிக் கடலின் வளங்கள் ஆராயப்பட்டு எந்த இடத்தில் எவ்விதமான கடற்றொழில் முறையில் ஈடுபடமுடியும் என்பது வகுக்கப்படல் வேண்டும்.

அரசியல்மயப்படுத்தப்பட்ட பிரச்சினை பல்கலைக்கழகங்கள் மூலம் சமூகமயப்படுத்தப்படுவதனால் இதற்கு நிச்சயம் ஒரு தீர்வு கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இச்சந்திப்பின்போது வடபகுதிக்குள் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவலுக்கும் கரையோரக் கிராமங்களில் இடம்பெறுகின்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கும் எவ்வாறானதொரு தீர்வு வடபகுதி மீனவர்களுக்கு வழங்கப்படப் போகின்றது என யாழ். ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இப்பிரச்சினை யுத்தம் முடிவடைந்த பிற்பாடே ஏற்பட்டதாகவும் ஆரம்பத்தில் தென்னிலங்கை மீனவர்கள் பருவகால மீன்பிடியில் ஈடுபட்டமையால் இப்பிரச்சினையை அரசியல்வாதிகளே கையாளவேண்டும் என றுகுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் பதிலளித்தார். (அ-4)




# பதிவு பெறாத ஆட்டோக்கள் யாழ்.நகரில் தரிக்க முடியாது

## யாழ். மாநகரசபை அறிவிப்பு

வடபிராந்திய ஆட்டோ சங்கத்தில் பதிவினை மேற்கொள்ளாத ஆட்டோக்கள் யாழ். நகர்ப்பகுதியில் வைத்தியசாலை வீதியில் தரித்து நின்று பயணிகளை ஏற்ற முடியாது என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இதற்கு வடபிராந்திய ஆட்டோ சங்கமும் ஒத்துழைப்பு வழங்குவதாக அச்சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் நடுவேயுள்ள வாகனத் தரிப்பிடத்தை அகற்றுவது தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். மாநகரசபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நகர்ப்பகுதியில் ஏற்பட்டுள்ள வாகன போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ். மாநகர சபையினர் ஆஸ்பத்திரி வீதியின் நடுவே அதாவது சத்திரச் சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரையான பகுதியில் வாகனங்கள் வீதியின் நடுவே தரிப்பிடுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வாகனத் தரிப்பிடத்தை அகற்றுவது தொடர்பாக யாழ். மாநகரசபையினால் அறிவிக்கப்பட்டிருந்ததோடு இது தொடர்பில் விமர்சனங்களும் எழுந்திருந்தன.

இதனையடுத்து நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போது ஆஸ்பத்திரி வீதியின் நடுவே வாகனங்கள் தரித்து நிற்பதை முற்றாக கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறு செய்தால் வர்த்தகர்கள் பாதிப்படைவார்கள் எனவும் வர்த்தகர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட முடியும் எனவும் பொருட்களை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் வாகனங்கள் தரித்து நிற்க வேண்டியது தவிர்க்க முடியாது என யாழ்.வணிகர் கழகத் தலைவர் உட்பட வர்த்தகர்கள் கருத்து தெரிவித்தனர்.

அத்தோடு வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரத்தால் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பொலிஸ் நடமாடும் சேவை நிலையத்தை அவ்விடத்தை விட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிகளவு இடத்தை பொலிஸ் சேவை நிலையம் பிடித்துள்ளதால் வர்த்தகர்களுக்கு இடையூறாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உரையாற்றிய முதல்வர் ஆஸ்பத்திரி வீதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வீதியின் நடுவே வாகனங்கள் தரித்து நிற்பதை மட்டுப்படுத்த வேண்டும். வர்த்தகர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எந்த நடவடிக்கையினையும் செய்ய வேண்டும் என்பதில் மாநகர சபை உறுதியாகவுள்ளது.

அத்தோடு ஆட்டோ தரிப்பிடத்தில் ஆட்டோ சங்கத்தில் பதிவினை மேற்கொள்ளாத ஆட்டோக்கள் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்க முடியாது. அத்தோடு இதனைக் கண்காணிக்கும் நோக்குடன் ஆட்டோ சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட ஆட்டோக்களுக்கு மாநகரசபையினால் ஸ்ரிக்கர் ஒட்டப்படவுள்ளது.

அத்தோடு கார் தரிப்பிடம், கனரக வாகனங்கள் தரிப்பிடம் என்பன தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆட்டோ தரிப்பிடத்தில் பதிவில்லாத ஆட்டோக்கள் தரித்து நிற்பதை கண்காணிக்க சங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் முதல்வர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு ஆட்டோ சங்கத்தினர் மாநகரசபை எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தனர். (அ-6)

# எழுத்தாளர்கள் விண்ணப்பிக்கலாம்

(தும்பளை)

வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் சிறந்த நூல் பரிசுத்தேர்வில் பங்குகொள்ள விரும்பும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட எழுத்தாளர்கள் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குபற்றும் எழுத்தாளர்களின் வெளியீடுகள் 2012 ஜனவரி முதலாம் திகதிக்கும் 2012 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் வெளிவந்தவையாக இருப்பதோடு அவை முதற்பதிப்பாக அமைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட நூலின் 4 பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தபுரம் சந்திப்பகுதியிலுள்ள புடைவையகம் முற்றாக எரிந்தது

## பல இலட்சம் பெறுமதியான புடைவைகள் நாசம்



(யூனியன்குளம்)

ஸ்கந்தபுரம் சந்திப் பகுதியில் அமைந்திருந்த புடைவை விற்பனை நிலையமும் அதனுடன் இணைந்திருந்த கட்டடத்தில் அமைந்த தையல் நிலையமும் இனந்தெரியாத விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விசமத்தனச் செயலில் கந்தபுரம் சந்திப்பகுதியில் அமைந்த தேஜா புடைவையகம் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டதுடன் அருகிலிருந்த தையல் கடையும் எரிந்து நாசமாகியுள்ளது.

இதில் புடைவை விற்பனை நிலையத்திலிருந்த 10 இலட்சம் பெறுமதியான ஆடைகள் முற்றாக அழிந்துள்ளன. அத்துடன் தையல்கடையில் இருந்த பெறுமதியான உபகரணங்களும் எரிந்துள்ளன. நேற்று முன்தினம் இர்வு தையல்கடை பூட்டை உடைத்துக்கொண்டு உட்சென்றவர்களே புடைவையகம்மீது தீ வைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

கடை முற்றாக தீ பரவிய பின்னரே அப்பகுதியில் இருந்தவர்களால் தீப்பரவல் அவதானிக்கப்பட்டது. இதனாலேயே இத்தீப்பரவலை உடனடியாக அணைக்க முடியாமல் போயுள்ளது. பின்னர் அதிகாலை 4.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-5-270)

# பொலிஸார் முறையாக விசாரணை நடத்தினால் 24 மணிநேரமே போதும்

## ஐ.தே.கட்சி எம்.பி.ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை என அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்காக நேற்றையதினம் பாராளுமன்றில் சமர்ப்பித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குற்றங்கள் மற்றும் ஊழல்களை இல்லாதொழிக்க வேண்டும் என எதிர்க்கட்சி பாரிய அழுத்தம் கொடுக்கும் நிலையில் அதனை நிறைவேற்றவென செயற்படும் போது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டத்தின் மூலம் பொலிஸாருக்கு மேலதிக அதிகாரம் கிடைக்காது எனவும் மாறாக விசாரணை நடவடிக்கைகளை முறையாக செய்து முடிக்க உதவும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின் இரண்டு வருடகாலங்கள் அமுலில் இருக்கும் என அமைச்சர் அநுர பிரியதர்ஷனயாப்பாகூறினார்.

இதன் போது சபையில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க இன்று நாட்டில் காட்டுச்சட்டம் நடைமுறையில் உள்ளதாகவும் பொலிஸார் சுயாதீனமாக செயற்படுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சரியான வகையில் விசாரணை நடத்தி சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த வேண்டுமானால் அதற்கு 24 மணித்தியாலமும் அதிகமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக் காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 30.06.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 16.03.2013, 17.03.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி. | நாவலர் வீதி. |
| | மானிப்பாய், |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | --- |
| நெல்லியடி | --- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2203)


# ரிஸானாவின் குடும்பத்திற்கு பத்து இலட்சம் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்தினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் நேற்று காலை சந்தித்துள்ளார்.

இதன்போதே பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

அத்துடன் ரிஸானா நபீக்கின் சகோதரிக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவகத்திலும் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

# கர்ப்பப்பை வெடித்து தாயும் சேயும் மரணம்

(கொழும்பு)

குழந்தை பிரசவிப்பதற்கென பலபிட்டி வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாய் மூன்றாவது குழந்தையை பெற்றெடுப்பதற்கு முன்னர் கர்ப்பப்பை வெடித்து கருவில் இருந்த குழந்தையுடன் உயிரிழந்துள்ளார்.

பிரசவத்திற்காக 37 வயது கர்ப்பிணித்தாய் நேற்று முன்தினம் மாலை பலபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் கருவில் இருந்த குழந்தையின் தலை பெரிதாக காணப்பட்டதால் குழந்தையை பெற்றெடுப்பதில் தாய்க்கு சிரமம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதும் உபாயமார்க்கத்தை பயன்படுத்தி குழந்தையை வெளியில் எடுக்க வைத்தியர்கள் மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை.

குழந்தையை வெளியில் எடுக்க வைத்தியர்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலயங்கள் போராடியபோதும் அது பலனளிக்கவில்லை. குழந்தை உயிரிழந்த பின் தாயின் கர்ப்பப்பை வெடித்து அதிக இரத்தம் வெளியேறியதால் அவரும் உயிரிழந்துள்ளார்.

இந்த பரிதாபச் சம்பவத்தால் தாயின் உறவினர்களும் அயலவர்களும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

இதேவேளை, குழந்தையின் தலை பெரிது எனத் தெரிந்ததும் அதனை சிசேரியன் மூலம் வெளியில் எடுக்காதது ஏன் என உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 12.75<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: B -1025 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5'1"<br>கி.பா: 52.75, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: HNDA<br>தொ.இ: G -1090 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'8"<br>கி.பா:38, 4 இல் செவ்<br>தகைமை/தொழில்: Dip.in Physical Education<br>தொ.இ: B -1026 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 10.75<br>தகைமை/ தொழில்: BSc (சுவீடன் PR)<br>தொ.இ: G-1087 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5'7"<br>கி.பா: 37<br>தகைமை/ தொழில்: BSc<br>தொ.இ: B -1028 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 53.5, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc<br>தொ.இ: G -1088 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>உயரம்: 5'10"<br>கி.பா: 29.75<br>தகைமை/தொழில்: NCT (சிவில் இன்ஜினியர்)<br>தொ.இ: B -1029 | பிறப்பு: 1981 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'2'<br>கி.பா: 62.75, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)<br>தொ.இ: G -1091 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை உற்பத்தி நாடுகள் இணைந்து அமைப்பை உருவாக்கின

(கொழும்பு)

ITPF என்ற பெயரில் சர்வதேச தேயிலை உற்பத்திநாடுகளின் அமைப்பொன்று நேற்று முன்தினம் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கறுப்புத் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் இலங்கை, இந்தியா, கென்யா ஆகிய முன்னணி நாடுகளும் இந்தோனேஷியா, மலாவி மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளும் இந்த சர்வதேச அமைப்பில் பங்கெடுத்துள்ளன.

சீனாவும் ஈரானும் அதன் தூதுவர்களை தொடக்க விழாவுக்கு அனுப்பி வைத்திருந்ததாக இந்த சர்வதேச சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்று இலங்கைத் தேயிலைச் சபையின் வர்த்தக ஊக்குவிப்புத்துறை இயக்குநர் ஹசித்த டி அல்விஸ் தெரிவித்தார்.

சர்வதேசசந்தையில்தேயிலையின்விலையை நிர்ணயிப்பது, தேயிலை நுகர்வு நாடுகளுடன் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பது மற்றும் உற்பத்திச் செலவைக் குறைப்பது போன்ற நோக்கங்களுக்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

தேயிலைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம், இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறை பல தசாப்தங்களாக முன்னேற்றப்படாமல் இருப்பதாக விசனங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

தேயிலைத் தொழிலாளர்களின் அடிப்படை மருத்துவ, சுகாதார, போக்குவரத்து, வீட்டு வசதிகள் மற்றும் குழந்தைகளின் கல்வி உள்ளிட்ட வசதிகள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது முன்னேறிய நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால், இலங்கை தேயிலை சபையின் கருத்துக்கள் தவறானது என்று மூத்த தொழிற் சங்கத் தலைவரும் செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஓ.ஏ. ராமையா சுட்டிக்காட்டினார்.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து பணவீக்கமும் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தொகை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவானது என்று அவர் விபரித்தார்.

இந்தியாவைப் போல தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் அடிப்படை உணவுப் பொருட்கள் இலங்கையில் வழங்கப்படுவது இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

## கரைதுறைப்பற்று பி. சபையின் பாதீடு காட்சிப்படுத்தப்படவில்லை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இவ் வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் காட்சிப்படுத்தப்படவோ அல்லது வெளியிடப்படவோ இல்லை என பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.


இதன் காரணமாக பிரதேசத்தின் அபிவிருத்தி வரி அறவீடுகள் குறித்து தமக்கு தெளிவற்ற நிலையும் பிரதேச சபையின் மீது நம்பிக்கையில்லா தன்மையும் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இவ் வருட வரவு செலவுத்திட்ட மொத்த ஒதுக்கீடு ஒரு கோடியே 66 இலட்சம் என தமக்கு தெரிகின்ற போதும் தமது பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் குறித்து எதுவுமே தெரியாது எனவும் குறிப்பிடுகின்றனர். (அ-5-267)

# திருமண பதிவு கட்டணம் அறவிட வேண்டாம்

## ஆதிவாசிகளின் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)



திருமணப் பதிவிற்கென புதிதாக அறவிடப்படும் பணத்தை ஆதிவாசிகளிடம் அறவிடக் கூடாது என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலே எத்தோ கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமணப் பதிவிற்காக புதிதாக 5 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றமையானது காடுகளில் விவசாயத்தை நம்பி வாழும் ஆதிவாசிகளால் தாங்கிக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதிவாசிகளின் சம்பிரதாயத்திற்கு அமைய வரலாற்றில் திருமணப் பதிவு இடம்பெறவில்லை எனவும் தற்போதைய சந்ததியினருக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது, பாடசாலையில் சேர்ப்பது போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினை காரணமாக திருமணப் பதிவு செய்து கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளையர்கள் நாட்டை ஆட்சி செய்த போது கூட ஆதிவாசிகள் மீது எவ்வித வரியும் விதிக்கப்படவில்லை என ஆதிவாசிகளின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கல்லுண்டாய் வெளிக்கு வந்தது விமோசனம்

(யாழ்ப்பாணம்)



கல்லுண்டாய் வெளியில் நீண்ட காலமாக கழிவுகள் கொட்டப்பட்டு மேடாகக் காணப்பட்ட இடத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை இயந்திரங்கள் மூலம் தட்டிப் பரவியுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இப் பகுதியில் இனிவரும் காலங்களில் சுகாதாரப் பாதிப்புக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் உடனுக்குடன் பரவப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு அதற்குமேல் மணல் போட்டு மூடப்பட்டு வருகிறது. அத்துடன் தொழிலாளர்களை கொண்டு காற்றினால் பரவப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. கழிவுகள் எரிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 24 மணி நேரமும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

# கடற் கொந்தளிப்பு காரணமாகவே மக்கள் ஆஸிக்கு பயணிக்கவில்லை

## ஆஸி. அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய கடற்பகுதியில் காணப்படும் கொந்தளிப்பு காரணமாகவே கடந்த சில நாட்களாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் சட்ட விரோத அகதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அவுஸ்திரேலிய அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 300 அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர். இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 65 அகதிகளை ஏற்றிய இரண்டு படகுகள் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டன.

அத்துடன் கடந்த ஆண்டில் மாத்திரம் மொத்தமாக 17 ஆயிரத்து 202 அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வந்தனர். எனினும் 2013 ஆம் ஆண்டு ஜனவரியில் 188 அகதிகள் படகுகள் மூலம் வந்துள்ளனர். இந்த அகதிகள் அனைவரும் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ-2)

# களனி தொகுதி அமைப்பாளர் பதவி அமைச்சர் பசிலுக்கு?

(கொழும்பு)

களனி தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து மேர்வின் சில்வா நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என களனி பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள விசேட கடிதத்தில் பசில் ராஜபக்ஷவிற்கு இந்த பதவியை வழங்குமாறு கோரியுள்ளனர். களனி பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மதத் தலைவர்களும் ஆதரவளித்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளின் பிரதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ-2)



வடமாகாணத்தில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வீட்டுத்திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- [illegible])

# 'கேட்' சின்னத்தை கொண்ட கட்சியின் உரிமை நீக்கப்படும்

## தேர்தல் திணைக்கள பேச்சாளர்

நாட்டில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பட்டியலில் இருந்து ஐக்கிய தேசிய மாற்று முன்னணியை நீக்க தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக வர்த்தமானி நேற்று முன்தினம் அச்சிடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டதாக தேர்தல்கள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கட்சியானது 'கேட்' சின்னத்தை கொண்டுள்ளது. தேர்தல் சட்டத்தின்படி அரசியல் கட்சி ஒன்று வருடாவருடம் தமது பதிவை நீடித்துக் கொள்ள வேண்டும்.

எனினும் குறித்த கட்சியானது அந்த முறையினை கடைப்பிடிக்கவில்லை.

இந்த நிலையிலேயே குறித்த கட்சி, அரசியல் கட்சி என்ற அந்தஸ்தை இழப்பதாக தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரியாலை கிழக்கு வீதியில் சட்டவிரோதமான மண் அகழ்வு




அரியாலை கிழக்குப் பகுதியில் நீண்ட நாட்களாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் இந்தப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக 25 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களில் மண்ணினை அகழ்வு செய்து கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக மண்ணகழ்வில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் பலரிடம் கோரிக்கை விடுத்தும் மண்ணகழ்வு தொடர்ந்து இடம்பெற்ற வண்ணமேயுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் அ.ரவீந்திரதாசன், அப்பகுதி கிராமசேவையாளர் எஸ்.விஜிதரன் உள்ளிட்டவர்கள் யாழ் அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து மேற்படி விடயம் தொடர்பில் எடுத்துக் கூறியதோடு சட்டவிரோத மண்ணகழ்வு உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபரினால் சட்டவிரோத மண்ணகழ்வை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதாக பிரதேச சபையின் எதிர்கட்சித்தலைவர் தெரிவித்தார். (அ-6)

# இடை விலகிய மாணவர்கள் மீள இணைக்கப்படுகின்றனர்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலை விட்டு இடைவிலகிய மாணவர்களைமீண்டும்பாடசாலையில் இணைக்கும் திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளினூடாக கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோர் வீடுகளுக்கு சென்று பெற்றுக் கொண்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் வ.பிரதீபன் ஆலோசனையுடன் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் இவ்வருடமும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்ட நடவடிக்கை பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. (அ-5-70)

# கிளி.கட்டைக்காடு அ.த.க பா. கணனி அறை உடைத்து திருட்டு

## பலபெறுமதியான பொருட்கள் அபேஸ்

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி கட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கணனி செயற்பாட்டறை உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதியான உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையைபூட்டிவிட்டு நேற்று முன்தினம் பாடசாலைக்கு சென்றபோது கணனி அறை கதவு உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்ட கணனி இலத்திரனியல் உபகரணங்கள், மின் பிறப்பாக்கி இயந்திரம் உட்பட பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு 5 ஆயிரம் ஊட்டப் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் குறித்த பாடசாலையில் கணனி செயற்பாட்டறை கட்டப்பட்டு கணனி மற்றும் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் மின்சாரம் வழங்கப்படாமையால் இக்கணனி செயற்பாட்டறை செயலிழந்திருந்தது.

இந்நிலையிலேயே மேற்படி அறையின் கதவு உடைத்து உள்நுழைந்து கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இப்பாடசாலையில் காவலாளி வேலைக்கமர்த்தப்படாததன் காரணமாக சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பாடசாலை வளாகம் ஆள் நடமாட்டம் அற்றதாகவே காணப்படுகின்றது. இதனை சந்தர்ப்பமாக கொண்டே கொள்ளையர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5-263)

# வடக்கு மாகாணம் பாலஸ்தீனம் போல் மாறிவிட்டது-சுரேஷ் எம்.பி

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் தமிழ் பிரதிநிதிகளுடன் மனப்பூர்வமாகப் பேசுவதில்லை என்பதே உண்மை. அவர்கள் எம்மோடு பேச விரும்பவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எமது பிரச்சினைகளை முன்வைக்குமாறு அவர்கள் கூறிவருகின்றனர் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியா, இலங்கை பற்றி தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இந்தியா இரகசியமாகவும் வெளிப்படையாகவும் இலங்கைக்கு ஆதரவளித்தது. யுத்தம் முடிந்த பின், தமிழ் சமுதாயத்தின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக இந்திய தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை மீறியுள்ளது.

சீனாவின் ஆதரவு கிடைப்பதனால் ஜனநாயக நாடுகளுக்கு எதிராக நிற்கும் துணிவை இலங்கை பெற்றுள்ளது. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவையோ ஐரோப்பாவையோ கணக்கில் எடுப்பதில்லை. தம்மால் இந்தியாவையும் சமாளிக்க முடியுமென அவர்கள் கூறுகின்றனர்.

சீனா தம்மோடு நிற்பதனால் ஐ.நா.வையும் சமாளிக்க முடியுமென அவர்கள் நினைக்கின்றனர். உட்கட்டமைப்பு விருத்தி பற்றி அவர்கள் பெரிதாக கூறுகின்றனர். ஆனால் வீதிகள் அமைக்கப்படுவதும் மீள் வழங்கப்படுவதும் இராணுவ முகாம்களுக்காகவே. தமிழர்கள் இவற்றால் நன்மையடைவதில்லை.

புலிகளோடு இருந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுத்த பின்னர் இப்போது மீண்டும் அவர்களை கைது செய்கின்றனர். எங்கு பார்த்தாலும் இராணுவ சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றன.

தமிழ் இளைஞர்களை அரசாங்கம் துரத்தி விட நினைக்கின்றது. தமிழர்கள் யாவரும் சந்தேக நபர்களாக்கப்பட்டுள்ளனர். இதை நாம் கூறினால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதையும் பெரிதுபடுத்துவதாக கூறுகின்றனர். வடமாகாணம் பாலஸ்தீனம் போல ஆகிவிட்டது. அது எதிரிகளிடமிருந்து பிடிபட்ட இடமாகி விட்டது.

அவர்கள் எமக்கு எதனையும் தரப்போவதில்லை. நேரிடையாக கூறினால் இதயசுத்தியோடு அவர்கள் பேச விரும்புவதில்லை என்று அவர் மேலும் கூறினார். (அ-2)

# ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் பதவி தெரிவு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் மற்றும் தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தயா கமகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.


கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தின் போது பிரதி தலைவர் பதவிக்கு ஒருவரை தெரிவு செய்துகொள்ள முடியாது போனது.

இந்நிலையில் அடுத்த செயற்குழு கூட்டத்தின் போது அந்த தெரிவு இடம்பெறும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

இதனிடையே கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு தெரிவான நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து குற்றவியல் பிரேரணைக்கு வாக்களித்த உறுப்பினர்கள் அது தொடர்பான தமது கருத்தினை அறிவிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைகின்றது.

இந்த நிலையில் உறுப்பினர்களது விளக்கத்தின் அடிப்படையிலேயே அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (அ-2)



இந்திய -இலங்கையின் வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான சர்வதேச கருத்துப்பட்டறை நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட றுகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

348

## அம்மனின் ஆபரணங்கள்



சிங்கபுரியில் ஒரு பழங்கால அம்மன் கோவில் இருந்தது. அம்மன் மிகவும் சக்திவாய்ந்தது என்பதால் அதனைத் தரிசிக்க பக்தர்கள் வந்தனர். பக்கத்து ஓர் ஜமீன்தார் அந்த அம்மனுக்கு வைரமூக்குத்தி, நவரத்தினமாலை, கால்பதித்த ஒட்டியாணம் முதலிய ஆபரணங்களை வேறு சாத்தியிருந்தார்.

அம்மன் கோவிலின் பூசாரி அருணாசலம். அவரது மனைவி அன்னம்மாளுக்கு ஒருமுறையாவது அம்மனின் ஆபரணங்களைத்தான் அணிந்து அழகு பார்க்கவேண்டும் என்ற ஆசை பிறந்தது. கோவில் நகைகள் தன்னுடைய கணவனின் பாதுகாப்பில் இருந்ததால் அவற்றைத்தான் அணியக் கொண்டு வந்து கொடுக்குமாறு அவள் தன் கணவனிடம் கூறினாள்.

பூசாரியோ தன் மனைவியிடம் அம்மனின் ஆபரணங்களை மனிதர்கள் அணிவது மகாபாவம். அவற்றை எடுத்துவரமாட்டேன் என்றார்.

அன்னம்மாவோ பிடிவாதமாக இன்றிரவு மாத்திரம் அந்த நகைகளை எடுத்துவராவிட்டால் அப்புறம் நாளை காலையில் என் உடலை நம் வீட்டுக் கிணற்றில்தான் நீங்கள் காண்பீர்கள்... என மிரட்டினாள். தன் மனைவி ஒருவேளை அப்படிச் செய்துவிடுவாளோ எனப்பயந்து அவர் சரி இன்றிரவு ஊர் அட

### அம்புலிமாமா கதைகள்

ங்கியபின் கோவிலுக்குப்போய் அம்மன் நகைகளை எடுத்து வருகிறேன் என்றார்.

இரவு பதினொரு மணிக்கு அவர் கோவிலுக்குப்போய் அம்மனின் விக்கிரகத்தின் முன் நின்று தாயே என் மனைவி தற்கொலை செய்துகொள்ளும் பாவத்தை ஏற்காமல் இருக்க உன் நகைகளை ஒரு சிறிது நேரத்திற்கு உன்னிடம் இருந்து அப்புறப்படுத்துகிறேன். இதற்காக என்னை மன்னித்துவிடு எனக்கூறி அம்மனின் மீதிருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு சென்றார்.

அவர் கோவில் வாசலை அடையும் போது அம்மனைக் காண வந்த மற்றொரு தேவதை அம்மன் மீது ஒரு நகைகூட இல்லாதது கண்டு உன் நகைகளை அந்தப்பூசாரி எடுத்துச் செல்கிறானே... அவனைக்கூப்பிட்டு அந்த ஆபரணங்களை எல்லாம் வாங்கிக்கொள் என்றது.

அதற்கு அந்த அம்மன் சிரித்து விட்டு இந்தப்பூசாரி என் பக்தன். என்னிடம் முன்னதாக மன்னிப்புக் கோரி விட்டே நகைகளை எடுத்துக் கொண்டு போனான். இவன் மனைவிக்கு நான் நான்கு நாட்கள் அவகாசம் அளிக்கிறேன். அவன் இன்றிலிருந்து



நான்காவது நாளைக்குள் இந்த நகைகளைத் தன் கணவனிடம் திருப்பிக் கொடுக்காவிட்டால் அவள் தலை வெடித்துவிடும் என்றாள். கோவில் வாசலில் நின்ற பூசாரி அம்மன் கூறியதை எல்லாம் நன்கு கேட்டார்.

அவர் கோவில் கதவை நன்கு பூட்டிவிட்டு நகைமூட்டையுடன் வீட்டிற்குவந்தார். அந்த ஆபரணங்களை அவர் தன் மனைவியிடம் கொடுக்கவே அவள் உடனேயே அவற்றை அணிந்து கொண்டாள். அப்போது பூசாரி கோவிலில் அம்மனும் மற்றொரு தேவதையும் பேசியதைத் தன் மனைவியிடம் கூறினார்.

அவளோ இதெல்லாம் கட்டுக் கதை. நான் நம்பமாட்டேன். இந்த நகைகளையும் திருப்பிக்கொடுக்கமாட்டேன் என்று கூறினாள். அருணாசலமோ அம்மனைப் பிரார்த்தித்து அம்பிகே நீதான் என் மனைவியைக் காக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.


மூன்று நாட்கள் கடந்தது. அன்னம்மா தான் போட்டுக்கொண்ட அம்மனின் ஆபரணங்களைக் கழற்றி வைக்கவே இல்லை. நான்காவது நாள் நள்ளிரவில் ஒரு திருடன் பூசாரியின் வீட்டிற்குள் நுழைந்தான். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அன்னம்மாவின் உடலிலிருந்து அம்மனின் நகைகளை எல்லாம் அதிசாமர்த்தியமாக அவளுக்குத் தெரியாமல் கழற்றி எடுத்தான். அங்குள்ள அம்மனின் நகைகளையும் திருடி எடுத்துப்போவதே அவனுடைய நோக்கம்.

அவன் கோவில் வாசலை அடைந்த போது கோவில் கதவு திறந்து கிடப்பது கண்டு திடுக்கிட்டு கோவிலுக்குள் இன்னொரு திருடன் போய் இருக்கிறான் என எண்ணித் தன் கைத்தடியால் அவனை அடிக்கத் தயாராகக் கையில் வைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

அப்போது கோவிலுக்குள் நகைகளைத் திருடச் சென்ற மற்றத் திருடன் நகைகளைக் காணாமல் ஏமார்ந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்போது எதிரே மூட்டையோடு இன்னொருவன் கைத்தடியுடன் வருவதைக் கண்டு அவன் தன் தடியை எடுத்து அத்திருடனின் தலை மீது அடித்தான்.

இப்படி ஏதாவது நடக்கப்போகிறது என எதிர்பார்த்த முதல் திருடனும் தன் தடியால் மற்றத் திருடனை அடித்தான். இருவரும் பலத்த காயமுற்று நினைவிழந்து கோவிலில் விழுந்து கிடந்தார்கள்.

விடியற்காலையில் கண்விழித்த அன்னம்மா தன் உடலில் ஒரு நகைகூட இல்லாதது கண்டு பலமாகக் குரல் கொடுத்துத் தன் கணவனை எழுப்பினாள்.



ஐயோ! ஐயோ! நான் போட்டிருந்த நகைகள் காணவில்லையே என்று அலறினாள். அது கேட்டு ஓடிவந்த அவள் கணவன் வேண்டும் என்றே தன் மனைவி நகைகளை எங்காவது ஒளித்துவைத்துவிட்டு நாடகமாடுகிறாளோ என்ற பயங்கர சந்தேகம் அவனுள் எழ அவன் உண்மையைச் சொல்! நகைகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று கேட்க ஐயோ அம்மன் மீது சத்தியம்! நான் எங்கும் ஒளித்துவைக்கவில்லை என அலற அவள் சொல்வது உண்மை தான் என்று பூசாரி உணர்ந்தான். உடனே அவனுக்கு பயத்தினால் பகீரென்றது. அம்மனின் நகைகளுக்கு அவன் தான் பொறுப்பு! இப்படிக் காணாமற் போயிருந்ததால் அவன் என்ன சமாதானம் சொல்லமுடியும்? நகைகள் எங்குதான் சென்றன யார் எடுத்திருப்பார்கள்.

உடனே கை, கால்கள் வெலவெலக்க கோயிலை நோக்கி ஓடிய அவன் அம்மா! தேவி! இந்த அபவாதத்திலிருந்து என்னைக் காப்பாற்று! காணாமற்போன நகைகளை மீட்டுக்கொடு! இல்லையெனில் என்னை ஜமீன்தார் சும்மா விடமாட்டார் என்று புலம்பிக்கொண்டே அம்மனை அடைந்தான். என்ன ஆச்சரியம்? இங்கு அம்மனின் நகைகள் ஒரு மூட்டையில் முடித்து வைக்கப்பட்டிருக்க அருகே இரு திருடர்கள் நினைவின்றி விழுந்து கிடந்தனர். நடந்ததை ஒருவாறு ஊகித்துக் கொண்ட பூசாரி உடனே நகைகளை அம்மனுக்கு அணிவித்தார். பின்பு காவலதிகாரிகளிடம் திருடர்களை ஒப்படைத்தார். அதற்குள் அவன் மனைவியும் கோயிலை நோக்கி ஓடி வந்தாள். அம்மன் மீது நகைகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தாள். உடனே அவளிடம் பூசாரி பார்த்தாயா! அம்மனின் மகிமையை! நீ நான்கு நாட்களுக்குள் நகைகளைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் உன் தலை வெடித்துவிடும் என்று அம்மன் கூறியதை நான் உனக்கு சொன்ன போது நீ நம்பவில்லை. ஆனால் அம்மனின் தீராத கோபத்துக்கு ஆளாகிவிடுவாயோ என்று பயந்து நான் இந்த நான்கு நாட்களாக அம்மனிடம் கதறிவேண்ட அம்மனும் மனமிளகி உன்னைத் தண்டிக்காமல் தன் நகைகளை மட்டும் எடுத்துக்கொண்டாள் என்றார். அவர் சொன்னதை அப்படியே நம்பிய அவள் மன்னித்துவிடு தாயே! என கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

இதற்குப்பின் அன்னம்மா தன் கணவனிடம் நகை என்ற பேச்சே எடுக்கவில்லை. கணவனோடு சேர்ந்து திருக்கோயில் பணிகளில் ஈடுபட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

23

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## அன்னைக்கே விழுந்துருச்சு விரசலுக்கான விதை...



பிள்ளைகளவிடப் பேரன் பேத்தி களத் தொட்டுப்பாக்கத்தான் ஆசைப் படும் கெழடுக. பிள்ளைக ரூவத்துல தங்களப் பாக்கிற மனுசங்க. பேரன் பேத்தி ரூவத்துல தாய் தகப்பனப் பாக்குறாக...

"ஏலே அய்யா... வாடா வாடா வாடா"- கருத்தமாயி கை நீட்டிக் கூப்புடுவாரு பேரன ; வரமாட்டான். உடம்ப ஒரு முறுக்கு முறுக்கி ஓடிப்போவான்.

"ஆத்தா என் கண்ணு... வாம்மா வாம்மா வாம்மா"- ஆசையாக் கூப்புடுவாரு பேத்திய. ஆளக் கண் டாப் பொந்துக்குள்ள ஓடிப் போகும் பாருங்க நண்டு... அப்படி ஒளிஞ்சு போவா. அவ.

"ஏன் வரமாட்டேங்குது பிள்ளைக?"

நெடுநாளா நெஞ்சு குடைஞ்ச கேள்விக்கான பதிலைப் பொட்டுல அடிச்சமாதிரி ஒரு நாள் போட்டு உடைச்சிட்டா லச்சுமி.

"சுத்த பத்தமா வளத்து வச்சிருக் கேன்; வீச்சம் எடுக்கிற ஆளுகள அண்டாது எம்பிள்ளைக"

"திடுக்" குன்னு ஆகிப்போச்சு கெழவனுக்கு. அடி வகுத்துல் இருந்து கொப்புளிச்சு வந்த கோபம், நெஞ்சுக்குழி வரைக்கும் வந்து ஒடஞ்சு ஒடஞ்சு திரும்பியும் உள்ளயே போயிருச்சு.

"வீச்சமா?" ரெண்டுகையும் எடுத்து மோந்து மோந்து பாத்துக்கிட்டாரு கருத்தமாயி.

"இருந்தாலும் இருக்குமோ?"

சிட்டம்மா சுட்டுக் கொடுத்த தோசைதான் குடும்பத்தப் பிரிச்சுக் கூறு போட்டுருச்சு.

"நம்மளுக்குத்தான் பழகிப் போச்சு பழைய கஞ்சி; பேரன் பேத்திக்குப் புடிக்குமா?" ஆசை ஆசையா தோசை சுட்டுக் கொடுத்தா சிட்டம்மா.

அதுல அவளுக்கே தெரியாம நடந்து போச்சு ஒரு தப்பு.

நேத்து வடை சுட்ட எண்ணையப் பத்திரப்படுத்தி வச்சிருந்தா பாருங்க பாத்திரத்துல. அதுல சுட்டுட்டா தோசைய.

ஆசை ஆசையா தோசைதின்ன பிள்ளைகளுக்குக் கொஞ்ச நேரத்து லயே குடல் குறிகாட்டிருச்சு; மத்தி யானமே புடுங்கிருச்சு வயிறு.

வயித்தாலயாப் போகுது. வாசல் பூரா மஞ்சத் தண்ணி தெளிச்ச மாதிரி மாறி மாறி உக்காந்து எந்திரிக்குது பிள்ளைக. கழுவி முடிக்கு முன்ன கழியுதுக பாவம்.

இன்ன பேச்சுன்னு இல்ல- கத்திக் குடியக் கெடுத்துப்புட்டான் முத்து மணி.

"பேரன் பேத்தியக் கூட்டிக்கிட்டு வான்னு புலம்பறீகளே...உங்கள நம் பிக் கூட்டிக்கிட்டு வந்தா என் பிள்ளை களப் பொணமாத்தான் தூக்கிட்டுப் போகணும் போலயிருக்கே. எனக்கு நீங்க ஒண்ணும் சொத்து சொகம் சேத்து வைக்கல; வண்டி வாகனம் வாங்கித் தரல. இந்த ஓட்டுக் கூரையத் தவிர ஒண்டவீடு இல்ல. சரி- வீடு கூடக் கட்ட வேணாம்... வீட்டுக்குள்ள ஒரு கக்கூசாவது கட்டி வச்சிருக்கியா?"

கக்கூசா? பதறிப்போனாரு கருத்த மாயி.

"கக்கூச கட்டினா வீட்டுக்குள்ள லட்சுமி இருக்க மாட்டாடா"- குடும்ப நம்பிக்கையச் சொல்லிக் கோவிச் சுட்டா சிட்டம்மா.

"கக்கூசு இல்லாத வீட்டுல என் பொண்டாட்டி லச்சுமி இருக்கமாட்டா"

பொண்டாட்டியக் கூட்டிக்கிட்டு, வயித்தாலபோன பிள்ளைகள சட்டை கிட்ட போடவிடாமத் தரதரன்னு இழுத்துக்கிட்டு அன்னைக்குப் போன வன்தான் முத்துமணி.

"எழுதிக் கொடு வீட்டை"ன்னு இன்னைக்கு வந்திருக்கான்.

"தம்பி முத்துமணி நீ படிச்சவன். அரசாங்க உத்தியோகம் பாக்கிற ஆளு. தரும நியாயம் தெரியும் உனக்கு. வீட்டை முழுசாக் கேட்டாக் கெழடு கட்டைக எங்க போகுங்க? நீ இருந்த வகுத்துல தான உன் தம்பியும் இருந்து வந்தான்; அவனுக்கும் ஒரு பங்கு இருக்கா இல் லையா? அதனால பாதி வீட்டுல அப்பன் ஆத்தா இருக்கட்டும். மீதி வீட்டுல நீ இருப்பா."

மகன் கடனைத் திருப்பிக் கேட் டப்ப கருத்தமாயி பக்கம் இருந்த ஊரு, அவன் வீட்டைக் கேக்கறப்ப அவன் பக்கம் சாஞ்சிருச்சு.



முழங்கால்ல தலைய வச்சு நிமிந்து பாக்காம நெஞ்சுக் கூடு வெந்து உக்காந்திருந்த கருத்தமாயி மனசுல மூணு கேள்விக ஓடுது:

பாதி வீட்டை இந்தப் பய பிரிச்சுக் கிட்டான்னா- மாடு கண்டு கட்டத் தொழுவுக்கு எங்க போவேன்? கோழி குருமான அடைக்கத் தாவாரத்துக்கு எங்க போவேன்? வெளிய இத்தப் போர்வை பொத்திச் சீக்காளியாப் படுத்துக் கெடக்கானே எங்கண்ணன் சுழியன்... அவன் படுக்கிற திண்ணை க்கு எங்க போவேன்?

எனக்குப் பெறந்தவன் வீட்டை ரெண்டாப் பிரிக்கிறான்; எங்கூடப் பெறந்தவன்- நெலத்த ரெண்டாப் பிரிச்சுப்புட்டான். என் உசுரத்தான் ஒடம்பவிட்டுப் பிரிக்காம இன்னம் விட்டு வச்சிருக்கு கடவுளு!

இத்தன கூத்துக்கும் ஆடாம அசையாம சாக்குல கட்டிவச்ச சக்கர வள்ளிக் கெழங்கு மாதிரி கெடக்கு கூடப் பெறந்த அந்தக் கெழட்டு உசுரு.

அண்ணன் சுழியன் கதைய நெனச்சா- ஐப்பசியில ஊத்தெடுக்கிற காட் டோடை மாதிரி கதகதன்னு கண்ணீர் ஊறுது கருத்தமாயிக்கு.

•••••

சுழியன் கதை இருக்கே! இது ஒரு வசத்துக்கு வராத கதை ; யாருக்கும் வாய்க்காத கதை.

தண்ணி போற வழி ஓடம் போற மாதிரி, விதிபோற வழி போகுதய்யா பொழப்புன்னு சொல்லுவாக. அதாவது பரவாயில்ல; தண்ணி எங்க போயிச் சேருதுன்னு தெரியும். ரெண்டு கரை யில எதாவது ஒரு கரையில முட்டு மோதி ஒதுங்கிடலாம்ங்கிற நம்பிக் கையும் இருக்கும்.

ஆனா காலம்ங்கிற 'கால்ல' உதை படற பந்து மாதிரி ஆகிப் போச்சு சுழியன் பொழப்பு. எந்தக் கால் எப்ப உதைக் கும்- பந்து எப்ப எழும்பும்- எங்க விழுகும்- எதுவும் சொல்ல முடியல அவன் பொழச்ச பொழப்புல.

கூட்டுத் தற்கொலை பண்ணிக் கிருச்சு குடும்பம்; கொல பண்ணிட்டு செயிலுக்குப் போயிட்டான் தம்பி. இனி ஒருத்தனா இருக்க முடியுமா அட்டணம்பட்டியில. காலன் ஆளுக வெட்ட வெளியி ஓடவிட்டு வெரட்டி வெட்டி எறிஞ்சிற மாட்டாகளா? ஊர விட்டே ஓடி ஒளிஞ்சுட்டான் சுழியன்.

கானா விலக்கு போயிக் குவாரியில கல்லொடச்சான். விவசாயப் பண்ணை யில வாரக்கூலிக்குப் புல்லு அறுத்துப் போட்டான். கொஞ்சநாள் சக்கம்பட்டி யல சீலைக்குச் சாயம் போட்டுகிட் டிருந்தான். எந்த வேலையிலயும் ஒரு வாரத்துக்கு மேல உடம்பு வளையல; மனசு தங்கல.

ஆத்தா ஊத்தி வச்ச கும்பாக் கஞ்சியை ஏத்திவிட்டவன் சோத்துக்கு அலஞ்சிருக்கான் பாருங்க- நாய் பட்ட பாட்டுக்குக் கிட்ட வரும் அவன் பட்ட பாடு. அவுக அப்பன் ஆத்தாவால அழிக்க முடியாத அழிச் சாட்டியத்தப் பத்தே நாள்ல அழிச்சுட்டுப் போயி ருச்சு பசி.

கால் கடுக்க அலஞ்சு கடைசியில எந்த ஊர்னு தெரியாத ஒரு ஊர்ல, வண்டியில இருந்து உருவி விழுந்த தென்னைமட்டை மாதிரி ஒரு ஓரமா விழுந்து கெடந்தான் சுழியன்.

"மேமே... மேமே... மே... மே..."

ஆட்டுச் சத்தம் கேட்டும் கண் ணைத் தொறந்தவனுக்கு நேரம் போகப் போக ஒண்ணொண்ணா விளங்குது.

ஊரு மார்க்கயன்கோட்டை. அவ னைக் காப்பாத்திக் கஞ்சி ஊத்துனவ கெழவி மாயக்கா, ஒத்த மக கனக ராணி; ஆம்பளை இல்லாத வீடு. பதி னேழு வெள்ளாடுகளுக்காக அந்த ரெண்டு சீவனும் இருக்கு; அந்த ரெண்டு சீவனுகளுக்காகப் பதினேழு வெள்ளாடும் இருக்கு. அந்த வீட்டுல பதினெட்டாவது உருப்படி சுழியன்.

"யப்பா தம்பி! நீ யார் பெத்த பிள்ளையோ? நல்ல பிள்ளையாத் தெரி யுது. முடிச்சு அவுக்கி மொள்ள மாரியா இருக்கிறவன் ஒன்ன மாதிரி பசியில விழுந்து கெடக்க மாட்டான். நீ யோக்கியன். எங்க வீட்டுலயே இருந்துரு. ஆடுக பின்னால ஓடி ஓடி நானும் குறுக்குச் செத்துப் போனேன். நாளைக் கிருந்து ஆடுகள நீ பாத்துக்க; உன் கஞ்சி- துணிமணி- எண்ணெய்- சீவக்காய்க்கு நான் பொறுப்பு."

மாயக்கா சொல்லுக்குச் சுழியன் தலையாட்டல; ஆனா மறுக்கவுமில்ல.

"ஏ கனகராணி தம்பிக்குத் தட்டுல அந்தச் சாமைச் சோத்தை வச்சுக் கரு வாட்டுக் கொழம்பக் கொண்டாந்து கலகலன்னு ஊத்து ஆத்தா."

ஒரு பரதேசிக்குச் சோறு போடற கஞ்சச் சிறுக்கி மாதிரி கடுப்பா நடந்து வந்த கனகராணிய அண்ணாந்தான் சுழியன்.

செவக்கிச் சீல கட்டத் தெரியாமக் குலுக்கை ஒண்ணு குலுக்கி நடந்து வந்தா எப்படி இருக்கும்? அப்படி யிருந்தா கனகராணி. உடம்புல மேல் பாகத்துக்கும் கீழ்ப்பாகத்துக்கும் ஒரு ஒப்புரவு கெடயாது. பாவம்... பெரிய வாயி. அத மூட வசதி பத்தாத ஒதடுக. நடுப்பல்லுல ஒரு சந்து. அதுல எவ்வளவு பெரிய ஈயும் அலுங்காம உள்ள போயிட்டு வேலைய முடிச்சிட்டு வெளியேறிரலாம். அலங்கோலத்தை யும் அகங்காரத்தையும் குழைச்சுக் குழைச்சுப் படைச்சிருக்கு சாமி அவ மூஞ்சிய.

என்ன பண்றது? பசி போட்ட போடும் மாயக்கா பேச்சுல இருந்த மரியாதையும் அங்கேயே தங்கி ஆடு மேயக்க வச்சிருச்சு சுழியன.

(தொடரும்)

வைரமுத்துவின் கவிதைத் துளிகள்...

உன் ஆசை முகம்

பாசமுள்ள வேலையில,
காசு பணம் கூடலையே,
காசு வந்த வேலையில
பாசம் வந்து சேரலையே...
சொத்தெழுதி போன பின்னே,
அஞ்சாறு வருசம், உன் ஆசை
முகம் பாக்காம,
பிள்ளை மனம் பித்தாச்சே,
பெத்த மனம் கல்லாச்சே....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இல.இராணுவ அதிகாரியை ஏற்க மறுத்தது அமெரிக்கா

## பாதுகாப்பு செயலாளர் சீற்றம்

(கொழும்பு)

தவறான் தகவல்களை வைத்துக் கொண்டு அமெரிக்கா, இலங்கைக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் இராணுவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காகச் செல்லவிருந்த மேஜர் ஜென்ரல் சுசந்த ரணசிங்கவை அமெரிக்கா குறித்த நிகழ்ச்சி திட்டத்துக்கு ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிப்போரின் போது 53 ஆவது படைப் பிரிவில் கட்டளைத் தளபதியாக இருந்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அவருக் கான பயிற்சி அனுமதியை அமெரிக்கா மறுத் திருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் மேஜர் ரணசிங்க இறுதிப் போரின் போது 53 ஆவது படையணி தளபதியாக கடமையாற்றவில்லை. அந்தப் படையணி யின் தளபதியாக மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவே கடமையாற்றினார்.

இந்த நிலையில் தமது இராணுவப் பயிற் சித் திட்டத்துக்கு இலங்கையின் இராணுவ அதிகாரி ரணசிங்கவை நட்பு நாடு என்ற வகையில் அமெரிக்கா உள்வாங்காமை தொட ர்பில் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கோத்தபாய குறிப்பிட்டுள்ளதாக அவ் இணை யத்தளம் குறிப்பிடுகின்றது.

மேஜர் ரணசிங்க, மேஜர் ஜெனரல் தயா ரட்நாயக்கவுக்கு பின்னர் விடுதலைப்புலி களின் புனர்வாழ்வு பணிகளுக்கான பொறுப் பதிகாரியாக 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி யில் இருந்து கடமையாற்றி வந்தார் என்று கோத்தபாய தெரிவித்ததாகவும் குறிப்பிடப்படு கின்றது. (அ-2)

# குற்றவியல் சட்ட திருத்த யோசனை மற்றுமொரு அடக்குமுறை சட்டமாகும்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

குற்றவியல் சட்ட திருத்த யோசனையா னது மற்றுமொரு அடக்குமுறைச் சட்டமாக கருதப்பட வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித கேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சந்தேக நபர்களை 48 மணித்தியாலங் கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு அனுமதியளிக்கும் வகை யில் குற்றவியல் சட்டம் திருத்தியமைக்க ப்படவுள்ளது.

இந்த சட்டம் நல்லாட்சி குறித்த எண்ணக் கருக்களுக்கு புறம்பானது. புதிய சட்ட திருத் தத்தின் ஊடாக சட்டமா அதிபருக்கும் பொலி ஸாருக்கும் அதீத அதிகாரங்கள் வழங்கப் படும். ஆளும் கட்சியின் அரசியல் நோக்கங் களைபூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் இந்த சட்ட திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை 48 மணித்தியாலங் கள் தடுத்து வைத்து சித்திரவதை செய்ய பொலிஸாருக்கு அனுமதி வழங்கும் வகை யில் இந்த சட்ட திருத்தம் அமைந்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான மாற்றுக் கருத் துக்களை முன்வைக்கும் தரப்பினரை ஒடு க்கும் நோக்கில் இந்த சட்டம் அமுல்படு த்தப்படவுள்ளது என்றார். (அ-2)

# கலைத்தூது கல்லூரியில் புதிய பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகி யற் கல்லூரியில் இவ்வாண்டிற்கான பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப் பங்கள் கலைத்தூது அழகியற் கல்லூரி அதிப ரினால் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம், சித்திரம், வயலின், ஓர்கன் (கீபோட்), புல்லாங்குழல், ட்றம், பரதம், கதகளி, மோகினி நடனங்கள், நாடகமும் அரங்கியலும் ஆகிய பிரதான பாடங்களிலும் கூத்து, கண்டிய நட னம், யோகாசனம், அழகுக்கலை, கிறிஸ்தவ, சைவசித்தாந்த பண்பாடுகள் ஆகிய சிறப்புப் பாடங்களும் துணைப் பாடமான ஆங்கிலமும் கலைத்தூது அழகியற் கல்லூரியில் பயிற்றப் படவுள்ளன.

மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப்பிப் பவர்கள் திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரியில் விண்ணப்பப்படிவங் களை பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னதாக பூர்த்தி செய்து ஒப்ப டைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் மேலதிகவிபரங்களுக்கு அழகி யற் கல்லூரி அலுவலக தொலைபேசி இலக் கமான 0212229419 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

### காய்கறிகளின் விலைகளை

# அதிகரிக்கும் தரகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

பொருளாதார மத்திய நிலையங்களிலு ள்ள இடைத்தரகர்களின் செயற்பாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்துமாறு கூட்டு றவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நுகர்வோர் அதிகார சபை தலைவர் ரூமி மர்சூக்கிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காய்கறிகளின் விலையதிகரிப்புக்கு மேற் படி இடைத் தரகர்களும் காரணமென அமை ச்சர் ஜோன்ஸ்டனுக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்தே அமைச்சர் இடைத்தரகர்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை க்கு பணித்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை பெற்றுக் கொள்ளும் இடைத்தரகர்கள் தாம் நினைத்தவாறு விலைகளை தீர்மானிப்பது டன் காய்கறிகளை பதுக்கி வைத்திருப்பதா கவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அமைச்சருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

காய்கறிகளின் விலைகளை தமக்கு வேண் டியவாறு அதிகரிப்பதற்கென இவர்கள் செய ற்கை தட்டுப்பாட்டினை ஏற்படுத்த முயற்சிப்ப தாகவும் அமைச்சருக்கு தெரிய வந்துள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வானிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பயிர்ச் செய்கை சேதமடைந்துள்ளதுடன் விளைச்சல் ஒப்பீட்டளவில் குறைவடைந்து ள்ளது. இந்நிலையில் வழமையிலும் காய் கறிகளின் விலைகளை அதிகரிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை சாதகமாக பயன்படுத்தி காய்கறி களை பதுக்கி தாம் நினைத்தவாறு அவற்றின் விலைகளை அதிகரிக்க முயற்சிக்கும் இடைத தரர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படுமெனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவித்தார்.

இதேவேளை, காய்கறிகளின் விலைகள் விரை வில் பழைய நிலைமைக்கு திரும்பி விடுமெ னவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முசுட்டை

**Botanical Name-**
***Rivea ornata***
**Family-Convolvulaceae**

பெரிய கொடி இனத்தைச் சேர்ந்தது. இதய வடிவான சிற்றிலை. இலையின் அடி யில் பட்டுப்போன்று மெல்லிய மயிர் அடர்ந் திருக்கும். இலைக்கோணத்தில் உண்டாகும் மலர்கள் வெண்ணிறமானது. நறுமணம் உள்ளது. 1-3 மலர்களைக் கொண்ட மலர்த் தண்டாகவும் இருக்கும். 5 கோளவடிவான புறவிதழ்கள், 5 அகவிதழ்கள் இணைந்து அடியில் குழல்வடிவாகவும் மேலே தாம்பா ளம் போன்றும் இருக்கும். உலர்கனி பளுப்பு நிறமானது. விதை 4 இருக்கும். வித்திலை கள் மிகவும் மடிந்திருக்கும். மூளைவேர் தடித்தது.

வேலியோரங்களில் படர்ந்து பருத்து ஏறு கொடியாக வளரக்கூடியது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

இதனை கீரையாக வறுத்தோ அல்லது பச்சடி செய்தோ பயன்படுத்தலாம். வாத நோய்கள், வெள்ளை சாய்தல், தோல் வியா திகளுக்கு சிறந்தனவாகும்.

100 g முசுட்டையில் உள்ள சத்துக்கள்

| | |
|---|---|
| ☆ சக்தி- | 28 kcal |
| ☆ புரதம்- | 8.0 mg |
| ☆ கொழுப்பு- | 0.4 mg |
| ☆ கல்சியம்- | 166 mg |
| ☆ இரும்பு- | 2.9 mg |
| ☆ β கரோட்டின்- | 3600 mcg |
| ☆ தயமின்- | 9 mcg |
| ☆ ரைபோபிளேவின்- | 9 mcg |
| ☆ நியோசின்- | 0.8 mg |
| ☆ விற்றமின் C - | 70 mg |

### முசுட்டைப் பஜ்ஜி

முசுட்டை இலைகளை சேகரித்து அவ ற்றை உப்பு நீரில் நன்கு அலசி அதனை கடலைமாவில் தோய்த்து தேங்காய் எண் ணெய்/ நல்லெண்ணெய்/ நெய்யில் பொரி த்து பயன்படுத்துவதால் உடல் ஆரோக்



கியமும் விற்றமின்களும் கொண்ட சத்துண வாகவும் மாலைநேர சிற்றுண்டியாகவும் இதனை பயன்படுத்தலாம்.

இது இதய நோய்களுக்கும் வாத நோய் களுக்கும் சிறந்தது. அத்துடன் உடல் வலிக ளையும் போக்கும்

### முசுட்டை இலை சூப்

❖ முசுட்டை இலை- 1 கப்
❖ சோம்பு - 1 ஸ்பூன்
❖ தேங்காய் துருவல் - 1/2 மூடி
❖ மல்லித்தூள் - 2 ஸ்பூன்
❖ சின்னவெங்காயம் -பொடியாக அரிந்தது
❖ மஞ்சள் பொடி - 1/2 ஸ்பூன்
❖ வெந்தயம் - 1 ஸ்பூன்
❖ மிளகு - 1/2 ஸ்பூன்
❖ தாளிக்க எண்ணய் - 3 ஸ்பூன்
❖ கடலைப்பருப்பு - 4 ஸ்பூன்
❖ பச்சைமிளகாய்- தேவையான அளவு

முசுட்டை இலையை அலசி கழனி நீரை கொதிக்கவிட்டு கீரையை அதில் போட்டு வேக விட வேண்டும். தேங்காய் துருவல், சோம்பு இவற்றை அரைத்து அதனுடன் மல்லியை வைத்து அரைத்து கரைத்து ஊற்ற வேண் டும். உப்பை போட வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி சோம்பு தூள் செய்து போட்டு சிவந்ததும் வெங்காயம் பாதி அளவு போட்டு வதக்கி சூப்பில் போட வேண்டும். கடலை பருப்பை எண்ணெயில் வறுத்து வைக்க வேண்டும். வெங்காயம், மிளகு இவற்றையும் இரண்டு பச்சை மிளகாய் வைத்து நரபுரவென்று தட்டி சூப்பில் போட்டு கொதி வந்ததும் இறக்கும் தருணம் வெந்தயம் போட்டு கடலை ப்ருப்பு போட்டு இறக்கிவிட வேண்டும்.

### இதன் பயன்

உடல் குளிர்ச்சியடையும் கண்களுக்கு குளி ர்ச்சி, தலைமுடி வளரும், இரும்புச்சத்துள் ளது. வெள்ளை நோய்க்கு நல்லது. எளிதில் ஜீரணமாகும். தாராளமாக மோஷன் போகும். மதியம் மட்டும் இக்கீரையை தாராளமாக சேர் த்து கொள்ள வேண்டும். இதுபோன்று எந்த கீரையானாலும் இரவில் சாப்பிடாதிருப்பது நல்லது. இரவில் கீரை சாப்பிட்டால் ஜீரண சக்தியை கட்டுப்படுத்தும். இதனால் ஜீரண சக்தி குறையும்.

### முசுட்டை துவையல்

★ முசுட்டை - 1 கப்
★ உளுத்தம்பருப்பு - 50 g
★ புளி எலுமிச்சம்பழம் -1
★ உப்பு- தேவையான அளவு
★ பெருங்காயம் - 1 துண்டு
★ காய்ந்த மிளகாய் - 4
★ தேங்காய்த் துருவல் -1/4 மூடி
★ பசுநெய் - 3 ஸ்பூன்

செய்முறை:- வாணலியில் நெய்யை விட்டு மிளகாய், உளுந்து, பெருங்காயம் இவற்றை வறுத்து உப்பு, புளியை சுட்டு வைத்து அரைக்கவும். முசுட்டையை வதக்கி நெய்யில் இதையும் அரைக்கவும். இத்து வையலை சாதத்தில் பிசைந்து சாப்பிட வேண்டும்

பயன்கள்:-குருதியை சுத்தப்படுத்து வதோடு உடலின் சுக உள்ளுறுப்புக்களை பலப்படுத்துவதாக அமையும்.

முசுட்டை இலை, துளசி, மிளகு என்ப வற்றை எடுத்து அவற்றை அம்மியில் போட்டு நன்கு அரைத்து 130 mg அளவு உள்ள மாத்திரைகளாக உருட்டி எடுத்து வைக்கவும். தினமும் இரண்டு மாத்திரைகள் வீதம் உண்டு வர உடல் பலமும் உடலில் ஏற்படும் களை ப்பும் நீங்கி உடல் ஆரோக்கியமடையும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளை அடிப்படையாக கொண்ட மின்உற்பத்தி முறை மாற்றப்படவேண்டும்

## சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

மின் உற்பத்தியில் காணப்படும் ஏகபோகத் தன்மை மாற்றப்பட்டு மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் போட்டித் தன்மைக்கு தயாராக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக சர்வதேச பொருளாதார ஊக்குவிப்பு சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனகம தெரிவித்துள்ளார்.

எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மின் உற்பத்திமுறை மாற்றப்பட்டு நவீன மார்க்கத்தின் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மின்பாவனையாளர்களிடமிருந்து முறைப்பாடுகளை பெறுவதற்கும் தகவல்களை வழங்குவதற்குமாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு புதிய இணையத்தளம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதனை அங்குராார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மின் உற்பத்தியுடன் தொடர்புடைய மின் சாரசபை உள்ளிட்ட முக்கிய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கு ஆலோசனை வழங்கும் ஒரு அமைப்பாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு செயற்படுகிறது. இதன் செயற்பாடுகள் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான பங்காளியாகக் காணப்படும் மின்சார உற்பத்தி புதிய மார்க்கங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் மின் உற்பத்தியானது ஏகபோகத் தன்மையைக் கொண்டுள்ளது.

இதனை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மின் உற்பத்தியை வேறு மார்க்கங்கள் மூலம் மேற்கொள்வதற்கு தனியாருக்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

மின்உற்பத்தியில் அரச நிறுவனங்கள் போட்டித்தன்மைக்குத் தயாராகவேண்டும்.

ஏகபோகத் தன்மையை இல்லாமல் செய்வதன் ஊடாக மின்சாரத்தை நுகரும் வாடிக்கையாளர்களுக்கு நன்மை ஏற்படும். இவ்வாறான மாற்றங்கள் மூலமே நாட்டு மக்களின் பணம் வீண் விரயமாவதைத் தடுக்க முடியும் என்றார்.

இதேவேளை மின் பாவனையாளர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் தகவல்களை வழங்குவதற்குமாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு (www.pucsl.gov.lk) என்ற புதிய இணையத்தளமொன்றை ஆரம்பித்துள்ளது.

மின்பாவனையாளர்கள் மின்சார விநியோகம் தொடர்பில் காணப்படும் முறைப்பாடுகளை வருடத்தில் எந்தநாளும் எந் நேரமும் இந்த இணையத்தளத்தின் ஊடாக வழங்க முடியும். ஆணைக்குழுவிடம் சமர்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் நிலைமையையும் இந்த இணையத்தளத்தின் மூலம் தேடிப் பார்க்க முடியும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க தெரிவித்தார். (அ-2)

## பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டார்

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஆதரவளித்த பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கொழும்பு கிருலப்பனை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

குறித்த சட்டத்தரணி பணி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும் போதே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

எனினும் சமூக நலன் கருதி குறித்த பெண் சட்டத்தரணியின் பெயரை வெளியிட முடியாது என்று சட்டத்தரணிகளின் கூட்டு அமைப்பின் உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஆதரவு வழங்கிய சட்டத்தரணிகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரியுள்ளனர். இது தொடர்பில் கிருலப்பன பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மஹாகும்பாபிஷேகம்

யாழ்.போதனா வைத்தியசாலை ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞான வைரவர் தேவஸ்தான கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை காலை 8.06 மணி தொடக்கம் 8.32 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறுமென ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (செ-9)

# கடந்த வருடத்தில் 74 ஆயிரம் கிலோ போதைப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் 2012 ஜனவரி முதல் டிசெம்பர் வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் மூலம் சுமார் 74 ஆயிரம் கிலோ ஹெரோயின் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்களை பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது இவற்றோடு தொடர்புடைய சந்தேக நபர்கள் 41 ஆயிரத்து 922 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

ஹெரோயின், கெனபிஸ், கஞ்சா, கொகெய்ன், ஹஸீஸ் மற்றும் மெதம்பெடமின் போன்ற பலகோடி ரூபாய்கள் பெறுமதியான பல்வேறு வகையான போதைவஸ்து பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு, கொழும்பு உட்பட நாடு முழுவதிலும் விமான நிலைய, சுங்க திணைக்கள, கலால் திணைக்கள அதிகாரிகள், சிறைச்சாலைகள், பொலிஸ் போதைப்பொருள் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான நடவடிக்கையின் போதே பலவிதமான 74 ஆயிரம் கிலோ எடையுள்ள போதைப்பொருட்களையும் 41 ஆயிரத்து 922 சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

ஒப்பீட்டளவில் கடந்த 2012 ஆம் ஆண்டு போதைவஸ்து பொருட்கள் கைப்பற்றப்பட்ட வீதமும் சந்தேகநபர்களை கைது செய்த வீதமும் அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# சிங்கள மற்றும் பௌத்த மதத்தை பாதுகாக்க சட்டங்கள் தேவை

## பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை

சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்படவில்லை என பொதுபலசேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சுதந்திரம் கிடைக்கப்பெற்று 60 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க சட்டங்கள் உருவாக்கப்படவில்லை என ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

முன்னோரினால் நிர்மாணிக்கப்பட்ட விகாரைகளைப் பாதுகாக்க பௌத்த பிக்குகள் நீதிமன்றின் உதவியை நாடவேண்டியுள்ளது. வெள்ளையர்களினால் உருவாக்கப்பட்ட தொல்பொருள் பாதுகாப்பு சட்டமே நாட்டில் அமுல்படுத்தப்படுகின்றது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி விகாரையில் ஓர் மலசல கூடத்தைக் கூட பௌத்த பிக்குவினால் உருவாக்க முடியாது.

வரலாற்று பெறுமதிமிக்க கட்டடங்கள், விகாரைகள் போன்றவற்றை எமது முன்னோர் நிர்மாணித்துள்ளனர். எனினும் அவற்றை இன்றுவரை வெள்ளையர்களே நிர்வாகம் செய்கின்றனர்.

கடும்போக்குடைய மதவாதிகளினால் நாட்டுக்கு பாதக நிலைமை ஏற்படும். மரபு ரீதியாக வாழ்ந்து வரும் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு எதிராக பொதுபலசேனா அமைப்பு போராடவில்லை.

அவர்களுடன் சகோதரத்துவத்தைப் பேணுவதில் சிக்கல்கள் கிடையாது. எனினும் கடும்போக்குடைய மத மற்றும் இன சிந்தனைகளை உடைய தரப்பினருடன் சுமுகமான உறவுகளைப் பேண முடியாது.

சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பங்கம் ஏற்படுத்தும் இரகசிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)


## மேலதிக மொழி கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் இவ்வாண்டுக்கான மேலதிக மொழி அபி விருத்திக் கற்கைநெறி (சிங்களம்/ ஆங்கிலம்) எதிர் வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி யில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கைநெறியில் இணைந்து கொள்ள விருப்பமுடைய ஆசிரியர் கள் மற்றும் திணைக்களத் தலைவர் கள், ஊழியர்கள் ஆகியோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களை 0777703 776 அல்லது 0775340144 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)



மிகிந்தலை ரஜகம விகாரையில் அம்பஸ்தல சைத்திய ராஜருக்கு சூட்டுவதற்காக மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட ஷீடா மாணிக்கம் நேற்று முன்தினம் கொழும்பு கங்காராம விகாரைக்கு கொண்டு வரப்பட்டது. இதனை வணங்குவதற்காக வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அகமகிழ்ந்து சந்தோசிப்பதைப் படத்தில் காணலாம். இதேவேளை மஹிந்த அரசின் ஆட்சி 2014 வரைதான் என ரணில் கருத்து வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் முதலாவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் பெப்ரவரி மாத்ம் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வணிகர் கழக பணி மனையில் நடைபெறவுள்ளது.

இதில்கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான முன்னைய வருடத்திற்கான முகாமைத்துவ சபையின் அறிக்கை சமர்ப் பித்தல், யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல், தலைவர், உப தலைவர், செயலாளர், உதவிச்செயலாளர், பொருளாளர் மற்றும் புதிய ஆண்டுக்கான முகாமைத்துவ சபைக்கான ஏனைய அங்க த்தவர் தெரிவுகள், செயலாளருக்கு 7 வேலை நாட்களுக்கு முன்னதாக அங்கத்த வர்களால் முன் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஏதாவது விடயங்களிருப்பின் அவை பற்றிய விளக்கமும் தீர்மானங்களும் நடைபெறவுள் ளதால் யாழ். வணிகர் கழகத்தின் அங்கத் தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முகாமைத்துவ சபை அறிவித்துள் ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் தலையீடு இன்றி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டுமா?

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது எவ்விதகளைப்பும் இன்றி தொடர்ச்சியாகக் கூடி தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. குறுகிய காலத்துக்குள்ளேயே அது தனது அறிக்கையைச் சமர்ப்பித்துச் சாதனையே படைத்தது என்றும் கூறலாம்.

இவ்வாறானதொரு நிலையில் இன்னொரு பாராளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் மீண்டும் பேசப்படுகிறது. தேசியப் பிரச்சினை என இலங்கை அரசினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பது தொடர்பிலானதே அந்த நாடாளுமன்றக் குழுவாகும். சுமார் ஒருவருட காலமாகப் பேசப்பட்ட இந்த விடயம், இலங்கை அரசியலில் அண்மைக் காலமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த வேறு சில நிகழ்வுகளால் மறக்கப்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் அது தற்போது தூசு தட்டப்பட்டுள்ளது.

தேசியப் பிரச்சினை தொடர்பான இந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அவரது கருத்துகள் பெரும்பாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சுட்டுவிரல் நீட்டப்பட்டதாகவே அமைந்திருந்தன. தேசியப் பிரச்சினைக்கான தீர்வு இழுத்தடிக்கப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என அவர் நேரடியாகவே குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆட்சியிலிருக்கும் தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைமைகள் தமிழர் பிரச்சினை தொடர்பில் இவ்வாறெல்லாம் கூறுவது ஒரு புதிய விடயமல்ல.

ஆனால், உள்ளூர் பிரச்சினைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவுக்கோ பிரித்தானியாவுக்கோ சென்று தீர்வினைக் காண முடியாது என அவர் தெரிவித்திருப்பது வேடிக்கையான விடயமே.

தமிழர்களின் பிரச்சினைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தீர்வு முடிவாக அமையாவிட்டாலும் சர்வதேச மத்தியஸ்தம் அல்லது அனுசரணை இல்லாமல் இலங்கைத் தமிழர்களுக்கு எந்தத் தீர்வும் எட்டப் போவதில்லை என்பதனை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இது தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமல்ல, தமிழ் மக்களினாலும் புரிந்து கொள்ளப்பட்ட விடயம் உண்மை. கடந்தகால கசப்பான அனுபவங்களை நோக்கினால் இதன் தேவையை உணர்ந்து கொள்வது கடினமான ஓீரு விடயமல்ல.

காலத்தை இழுத்தடித்து தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு தந்திரமாகவே இவை அமைந்திருந்தன.

நூறு தடவைகளுக்கும் மேலாகக் கூடிய பேராசிரியர், அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தில் பல விடயங்களுக்கு ஒட்டுமொத்த இணக்கப்பாடு காணப்பட்டன. தமிழ்பேசும் மக்களுக்கு குறைந்தபட்ச அனுகூலங்களையாவது வழங்கக் கூடியதான தீர்வுகளைக் கொண்ட இந்தக் குழுவின் அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு பல வருடங்கள் சென்ற நிலையிலும் அது தொடர்ந்து தூசு தட்டப்படாத நிலையிலே உள்ளது. இந்தக் குழுவின் சிபார்சுகளில் சிலவற்றினையேனும் நடைமுறைப் படுத்தியிருந்தால் தமிழர் பிரச்சினைக்கு இன்று ஓரளவேனும் தீர்வு எட்டப்பட்டிருக்கலாம். இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



ஆகவே, தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பின்னடிக்கின்றது என்ற இந்த விவாதம் வெறும் வெட்டிப் பேச்சே தவிர யதார்த்தமானதல்ல என்பதனை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, அண்மைக்காலத்தில் உள்ளூரில் பேசிப் பேசியே புண்ணாகிப்போன தமிழர் விவகாரத்துக்கு ஒரு தீர்வு கிட்ட வேண்டுமென்றால் அது சர்வதேச நாடொன்றினதோ அல்லது ஐ.நாவின் மத்தியஸ்தத்துடனோ இடம்பெற வேண்டும்.

மேலும் தமிழர் பிரச்சினை தொடர்பில் எதிர்காலத்தில் எந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக இருந்தாலும் முதலில் அரச தரப்பானது தனது நிகழ்ச்சி நிரல் ஒன்றினை முன்வைக்க வேண்டியது அவசியம். எந்த விடயங்கள் தொடர்பில் பேசுவது, பேச முடியும் என்பதனை அரசாங்கம் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும். இவை இரண்டும் இல்லாது தமிழர் பிரச்சினைக்கான எதிர்காலப் பேச்சுவார்த்தைகள் நிச்சயமாக தலையைச் சுற்றி வந்தும் மூக்கைத் தொட முடியாத நிலையிலேயே காணப்படும்.

தென்னாபிரிக்காவில் நூற்றுக்கணக்கான இனக்குழுக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் அன்றைய தென்னாபிரிக்க அரசு ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு அனைத்துப் பிரச்சினைகளையும் மிக இலகுவாகத் தீர்த்து வைத்தமை உலகறிந்த விடயம். அவ்வாறான தீர்வானது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினாலும் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே எட்டப்பட்டது. இன்று அந்த நாட்டில் நல்லிணக்கமும் ஐக்கியமும் கட்டியெழுப்பப்பட்டு அமைதிமிக்கதொரு நாடாக இது திகழ்கிறது.

தென்னாபிரிக்க அரசின் விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வுமே இவ்வாறானதொரு அமைதி நிலை அங்கு கட்டியெழுப்பப்பட்டதற்கு பிரதான காரணங்களாகின. தென்னாபிரிக்க அரசின் இந்தச் செயல் இன்று முழு உலகின் அரசியல் முன்னுதாரணங்களில் ஒன்றாகவே பேசப்படுகிறது.

தங்களது அழைப்பினை ஏற்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொண்டிருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இன்று தீர்வைக் கண்டிருக்க முடியுமென அவர் ஒரு படி மேலே சென்றும் கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறியிருப்பதானது, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் இன்னொரு அதி உச்ச அரசியல் நகைச்சுவையே என்பதனை கடந்தகால அனுபவங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பு சிந்திக்குமாயின் அல்லது அவர்கள் மக்களின் பிரதிநிதிகள் எனத் தங்களைக் கருதுவார்களாயின் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும். இதனை விடுத்து அமெரிக்காவுக்கோ பிரித்தானியாவுக்கோ ஓடுவதால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக எனக் கூறி இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் எத்தனையோ பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன என்பது அனைவரும் அறிந்த விடயமே. இவ்வாறான பேச்சுவார்த்தைகள் முறிவுக்கு வந்தமை அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை எந்தத் தரப்பிலிருந்து என்பதனை அனைவரும் அறிவர்.

ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள், அனைத்துக் கட்சிகள் மகாநாடு, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் மகாநாடு, பாராளுமன்ற தெரிவுக்குழு (மங்கள முனசிங்க), அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் கூட்டம் (திஸ்ஸ விதாரண), அரசு- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு என அண்மைக் காலத்தில் சுழற்சியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுக்கிக் கொண்டே [illegible]. ஆனால், [illegible] கிட்டிய [illegible] இல்லை.

வினால் நியமிக்கப்பட்டதும் சர்வதேசத்தால் மிகுந்த அவதானத்துடனும் நோக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளுக்கு என்ன நடந்தன? அவையும் கிடப்பிலேயே உள்ளன. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையைச் செயற்படுத்துமாறு இலங்கை அரசை சர்வதேச நாடுகள் கேட்டுக் கொண்டிருந்தும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளன.

ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதியைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா உத்தரவிட்டதும் அதனிடம் சரணாகதி அடைந்து அந்த நாடு சொன்னது போல் நடந்து கொண்ட இலங்கை அரசானது, தமிழர் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வை வழங்குங்கள் என அதே அமெரிக்கா கேட்டால் சர்வதேச சண்டித்தனம் [illegible]ந்த வகையில் நியாயமானது?

நன்றி இணையம்

எனவே, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றினை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் இலங்கை அரசு முதலில் திரிகரணசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்பதும் அவசியமாகும். இதனை விடுத்து இவ்வாறான சந்தர்ப்பவாத பேச்சுக்களைப் பேசுவதனால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில சமாதான நீதிவான்கள் கட்டணம் அறவிடுகின்றனர்

## மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் ஒரு சில சமாதான நீதிவான்களின் செயற்பாடுகள் மக்களை கவலை கொள்ள வைப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சமாதான நீதிவான்களால் ஆவணங்கள் உறுதிப்படுத்தப்படும் போது எவ்வித கட்டணங்களும் பெற்றுக் கொள்ளப்படக்கூடாது என்ற விதி முறையை மீறி சில நீதிவான்கள் கட்டணங்களை எதிர்பார்ப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களிடம் இருந்தும் இவ்வாறு சில நீதிவான்கள் பணம் பெற்று ஆவணங்களை உறுதிப் படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான சமாதான நீதிவான்கள் இனங்காணப்பட்டு நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-5-267)

# அறநெறி பாடசாலைகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள்

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை , மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், ஆலையடி வேம்பு இந்து மாமன்றம், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் மூலம் மாமன்றம், நிவாரணப் பொருட்களை விநியோகித்து இருக்கின்றது என அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் மு.கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தற்போது பாடசாலைகள் ஆரம்பித்திருப்பதால் அப்பியாசப்புத்தகங்கள் தேவை என மாமன்ற அங்கத்துவ சங்கங்கள் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து மாமன்றம் அப்பியாசப் புத்தகங்களை தயாரித்து அங்கத்துவ சங்கங்கள் மூலம் அனுப்பி வருகின்றது.

யாழ். மாவட்ட மாணவர்கள் மாமன்ற யாழ். பணிமனையில் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆறு.திருமுருகனுடன் (021 2221075) என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அப்பியாசப் புத்தகங்களைப் பெறலாம் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 442 இலங்கையர்கள் சவுதி அரேபிய சிறையில்

சவுதி அரேபியாவின் 16 சிறைச்சாலைகளில் 442 இலங்கையர்கள் தண்டனை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

சவுதியின் மலாஸ் சிறைச்சாலையில் மட்டும் 101பேர் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் கொள்ளை, களவு, ஊழல், பாலியல் வன்முறை, சட்டவிரோத மதுபான விற்பனை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த தண்டனை அனுபவித்து வருகின்றனர். (அ-2)

# அம்பாந்தோட்டையில் முதலீடு; அமெரிக்கா விருப்பம் தெரிவிப்பு

அம்பாந்தோட்டையில் அமெரிக்கா முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிச்செல் சிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்று மேற்படி செய்தியினை வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட முன்னணி முதலீட்டு வாய்ப்பை கொண்ட மாவட்டமாக வரும் வாய்ப்பு உள்ளதாகவும் இந்த நிலையில் அங்கு முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உறவை கட்டியெழுப்ப முடியும் என்றும் தூதுவர் சிசன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் தற்போதைய நிலைமை காரணமாக வெளிநாட்டு முதலீடுகளில் பாதிப்பு ஏற்படும் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நூலக கற்கை நெறி மீட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 (2012/2013) பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலைய இணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (அ-2)

# துப்பாக்கிச் சூட்டில் பெண் சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பெண் இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் அச்செழு படைமுகாமில் இடம்பெற்றுள்ளது.

இதில் அச்செழு படைப்பிரிவினைச் சேர்ந்த சுனித்தி (வயது 33) என்ற பெண் சிப்பாயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

இது தொடர்பில் அச்செழு படைமுகாமின் பெண் சிப்பாய்களிடம் கேட்டபோது தவறுதலாக துப்பாக்கி வெடித்தமையே இவ்விபத்துக்கு காரணம் என கூறினர். (அ-6-4-78)




★ 1368 - சூ யுவான்ஷாங் சீனாவின் பேரரசனாக முடிசூடினான். இவனது மிங் பரம்பரை 3 நூற்றாண்டுகள் சீனாவை ஆண்டது.

★ 1556 - சீனாவின் சாங்சி மாநில நிலநடுக்கத்தில் 8 இலட்சத்து 30 ஆயிரம் வரையானோர் இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப்பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.

★ 1570 - ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது.

★ 1639 - பெருவைச் சேர்ந்த யூதக் கவிஞர் பிரான்சிஸ்கோ மல்டொனால்டோ டி சில்வா எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ 1719 - புனித ரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ்டைன் நாடு உருவாக்கப்பட்டது.

★ 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக்கக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 1793 - ரஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பிரித்தனர். ,

★ 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

★ 1870 - மொன்டானாவில் அமெரிக்கப் படைகளினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 173 செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1874 - விக்டோரியா மகாராணியின் மகன் எடின்பரோ கோமகன் அல்பிரட் ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டரின் ஒரே மகளான மரீயா அலெக் சாந்திரொவ்னாவை திருமணம் புரிந்தார்.

★ 1924 - விளாடிமிர் லெனின் ஜனவரி 21 இல் இறந்ததாக சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

★ 1937 - லியோன் ட்ரொட்ஸ்கி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் அரசைக் கவிழ்க்க முயன்றதாக 17 கம்யூனிஸ்டுகளின் மீது மொஸ்கோவில் விசாரணைகள் ஆரம்பமாகின.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் தலைநகர் திரிபோலியை நாசிகளிடம் இருந்து பிரித்தானியர் கைப்பற்றினர்.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் பப்புவாவில் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர். இது பசுபிக் போரில் ஜப்பானியரின் வீழ்ச்சிக்கு வழி கோலியது.

★ 1950 - இஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தது.

★ 1957-சென்னை மாநிலத்தில், தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.

★ 1973 - வியட்நாமில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.

★ 1996 - ஜாவா நிரலாக்க மொழியின் முதற் பதிப்பு வெளியானது.

★ 2002 - அமெரிக்க ஊடகவியலாளர் டானியல் பேர்ள் கராச்சியில் கடத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

★ 1897 - சுபாஷ் சந்திரபோஸ், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் (இ.1945)

★ 1907 - ஹிடெக்கி யுக்காவா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர் (இ.1981)

★ 1915 - ஆர்தர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (இ. 1991)

★ 1918 - கேர்ரூட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ.1999)

★ 1930 - டெரெக் வால்கொட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

### இறப்புகள்

★ 1873- இராமலிங்க அடிகள், ஆன்மீகவாதி (பி.1823)

★ 1944 - எட்வர்ட் மண்ச், நோர்வே நாட்டைச் சேர்ந்த ஓவியர் (பி.1863)

**இராமலிங்க அடிகள்**



வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் ஓர் ஆன்மீகவாதி ஆவார்.

**பிறப்பு**

இவர் கடலூர் மாவட்டம் மருதூரில் 05.10.1823 இல் பிறந்தவர். பெற்றோர் இராமையாபிள்ளை சின்னம்மையார் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்களைத் தீர்க்கும் இரத்தினங்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

நோய்களையும் குறைகளையும் எப்படி நவரத்தினங்கள் போக்குகின்றன.

நமது உடலில் ஏழு சக்கரங்கள் இருக்கின்றன. மூலாதாரம் முதல் சகஸ்தாரம் வரையிலும் உள்ள ஏழு சக்கரங்கள் ஒவ்வொன்றும் உடலில் குறிப்பிட்ட இயக்கங்களை நடத்துகின்றன. அவைகள் பிரபல்யத்தில் உள்ள காஸ்மிக் கதிர்களில் உள்ள ஏழு நிறங்களின் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. உதாரணமாக மூலாதாரத்திற்கு Infra-red எனப்படும் கேது கதிர்கள் ஆதாரமாக இருக்கின்றன.

சகஸ்தான் என்ற இடத்திற்கு இராகுவின் Ultra -diolet கதிர்கள் ஆதாரமாக இருக்கின்றன. மொத்தம் 11 சக்கரங்கள் உள்ளது என்றும் சிலர் கூறுவர்.

இந்த சக்கரங்கள் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்படுகிறது. சக்கரங்கள் புறக்காரணங்களாலும் அகக் காரணங்களாலும் பாதிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சக்கரம் பாதிக்கப்படும்போது அதனுடைய கட்டுப்பாட்டுக்குள் உள்ள அவயவங்கள், நாளமில்லாச் சுரப்பிகள் பாதிக்கப்படுகின்றன.

அந்த சக்கரங்களை மீண்டும் சரிவர இயக்க வைப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட உடல் இயக்கங்களை மீண்டும் இயக்கிவைக்க முடியும்.

குறிப்பிட்ட நிறமற்ற கதிர்களின் மூலம் உடம்பின் ஏழு சக்கரங்களும் இயங்குவதால் இதை குண்டலினி யோகச் சக்கரங்கள் என் பார்கள். இரத்தினங்கள் அழிவதன் மூலம் நிறக்கதிர்களின் குறைபாட்டை நீக்கலாம். இதன்மூலம் மீண்டும் ஆரோக்கியம் பெற லாம். இதனால் இதை வண்ண மருத்துவம் அல்லது இரத்தினச் சிகிச்சை என்பார்கள்.

### நோய்களும் நவரத்தினங்களும்

இதுவரையிலும் நவரத்தினங்கள் வெளியிடும் கதிர்களைப் பற்றியும் அந்தக் கதிர்களின் மூலம் எந்தெந்த நோய்களை தீர்க்க முடியும் என்பது பற்றியும் பார்ப்போம்.

ஒரு நோய் அல்லது குறைபாடு என்பது ஏதோ ஒரு காரணத்தினால் மட்டும் உருவாவதில்லை. உதாரணமாக தலைவழி பல காரணங்களால் வருகின்றது. கண்களில் வழி ஏற்பட்டாலும் ஜுரம் அடித்தாலும் அஜீரணத்தினாலும் மற்றும் வேறு பல காரணங்களினாலும் தலைவழி உண்டாகக்கூடும்.

எனவேதான் உங்களின் உடலைப் பரிசோதித்து மருந்துகளை டாக்டரின் ஆலோசனை பெற்று பயன்படுத்த வேண்டும் என்கின்றார்கள். அதைப் போன்றே ஒவ்வொரு நோயினும் பலவித நிறக்குறைபாட்டால் (Colour Rays Deficiency) வருகின்றன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட கற்களை பயன்படுத்தினால் இன்னும் சீக்கிரமாக நோய்களை குணப்படுத்தலாம். அல்லது கட்டுப்படுத்தலாம்.

### கற்கள் எப்படி நோய்களை குணமாக்குகின்றன?

கற்களை மோதிரமாகவோ பென்ரனாகவோ அணிந்து கொள்ளும் போது அக்கற்களில் இருந்து வெளிவரும் குறிப்பிட்ட நிறக் கதிர்கள் அணிபவர்களின் உடலில் பாய்கிறது.

அந்த ஒளியானது நரம்பு மண்டலத்தில் ஊடுருவி இரத்தத்துடம் கலக்கிறது. அதனால் உடலில் சில இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு உடலின் பாதிப்படைந்த நிறங்கள் பழுது நீக்கப்படுகின்றது. இதனால் உடலில் ஏற்படும் நோய்கள் மற்றும் ஆரோக்கிய குறைபாடுகள் படிப்படியாக நீக்கப்படுகின்றது.

நவரத்தினங்களை முறைப்படி பஸ்பப் படுத்தினால் நவரத்தின பஸ்பங்கள் கிடைக்கும்.


இப்போது முக்கிய நோய்களுக்கு எந்தெந்த இரத்தினங்களை பயன்படுத்தலாம் என்பது பற்றிப் பார்ப்போம்

### ஆஸ்துமா

காசநோய் ஆஸ்துமா, மூச் சுத்திணறல், காற்றுக்குழாய், கோளாறுகளால் ஏற்படும் ஜுரம், சளி, ஜலதோஷம் போன்றவற்றிற்கு ஆறு கரட் அளவில் சிவப்பு பவளத்தை வாங்கி ஆள்காட்டி விரல் அல்லது மோதிர விரலில் அணிய் வேண்டும். மேற் சொன்ன வியாதிகள் விரைவில் குணமாகும்.

### முதுகுவலி

தூக்கமின்மையினாலும் மன உளச்சலினாலும் முதுகுவலி ஏற்படும். மேலும் அதிக எடைகளை தூக்குதல் , திடீரென வேகமாய்




திரும்புதல், ஒரே நிலையில் வேலை செய்தல் போன்ற பல காரணங்களாலும் முதுகுவலி ஏற்படுகின்றது.

இதற்கு ஒன்பது இரத்தி (ஒரு இரத்தி = 180 மீ.கி.) எடையுள்ள தரமான செம்பவளத்தை அணியலாம். இதனுடன் தனியாக மஞ்சள் புஸ்பராகக் கல்லையும் சேர்த்து அணிந்து கொண்டால் முதுகுவலி படிப்படியாக குறைந்து விடும்.

### 3. நீரிழிவு

இந்த நோய் உள்ளவர்கள் சிவப்புப் பவளம் மற்றும் மஞ்சள் புஸ்பராகம் மோதிரத்தில் வைத்து அணிய வேண்டும். அல்லது சிவப்புப் பவளம் அணிந்தாலும் இந்த வியாதியில் இருந்து குணமடையலாம். பவளத்தை நடுவிரலிலும் கனகபுஸ்பராகத்தை ஆள்காட்டி விரலிலும் அணிந்தால் இந்த நோயைக் குணப்படுத்தலாம். இந்தக் கற்களை வெள்ளியில் பதித்து அணிய வேண்டும். நீடித்த நீரிழிவு நோயாளிகள் மருந்துகளை சாப்பிட்டுக் கொண்டிருந்த போதிலும் இக்கற்களை அணிந்தால் நாளடைவில் நோய்கள் கட்டுப் படும்.

### அஜீரணம்- வயிற்றுப் போக்கு

அடிக்கடி அஜீரணம், வயிற்றுப்போக்கு, சாப்பிட்டபின் வயிற்றுவலி ஆகிய கோளாறுகளுக்கு மரகதமும் கனகபுஸ்பராகமும் அல்லது சந்திரகாந்தக் கல்லும் சேர்த்து அணியவும்.

### காக்காய் வலிப்பு

காக்காய் வலிப்பு மற்றும் இதுபோன்ற வலிப்புகளுக்கு பச்சைக் கல்லும் சந்திர காந்தக் கல்லும் சேர்த்து அணியவும். நோய் கடுமையாக இருந்தால் பவளம் சேர்த்து அணிந்து கொண்டால் சீக்கிரம் குணமாகும்.

### பெண்களின் பிரச்சினைக்கு

பெண்களுக்கு ஏற்படும் ஒருவித விரகதி, உடல் உறவில் ஏற்படும் வெறுப்பு, எதையோ நினைத்து நினைத்து கலங்குதல் , அர்த்தமில்லாத மனோபாவம் ஆகியவற்றிற்கு தரமான பெரிய வெள்ளை முத்தை சிறுவிரல் மற்றும் ஆள்காட்டி விரல் ஆகியவற்றிலும் அணிந்து கொண்டால் நல்ல பலன்களைப் பெறலாம். மாதவிலக்கின் போது ஏற்படும் வலிக்கு வெள்ளைப் பவளம், சிவப்புப் பவளம் இரண்டையும் ஆள்காட்டி விரல் , நடுவிரல் இரண்டிலும் அணியவும்.

### மூலம்

இந்த நோய் உடையவர்கள் செம்பவளம் அல்லது சந்திர காந்தக் கல்லை மோதிரமாக அணிந்து கொண்டால் வெகு சீக்கிரம் நிவாரணம் பெறலாம். சிறுவிரல் மற்றும் ஆள்காட்டி விரலில் அணிந்து கொள்ள வேண்டும்.

### அல்சர்

அல்சர் போன்ற குடல் புண் கோளாறுகளுக்கு பச்சைக் கல்லையும் கனகபுஸ்பராகத்தையும் நடுவிரலில் அணியவும். கடுமையான நாட்பட்ட நோயாக இருந்தால் சந்திர காந்தக் கல்லும் சேர்த்து அணியலாம்.

### தலைவலி

தலைவலி பலவித காரணங்களால் ஏற்படும். எப்படி வந்தாலும் அதற்கு நிவாரணமாக




பச்சைக் கல்லும் சந்திரகாந்தக் கல்லும் அணியவும்.

### இருதய நோய்கள்

இருதயம் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கு பச்சைக் கல், சந்திரகாந்தக் கல் மற்றும் கனக புஸ்பராகும் ஆகிய மூன்றையும் அணிய வேண்டும். ஆரம்ப நிலையில் உள்ள இருதயக் கோளாறுகளை இதன்மூலம் குணமாக்கலாம். நாட்பட்ட நோய்களையும் இவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்.

### ஆண்மைக்குறைவு

ஆண்மைக்குறைவு கெட்ட பழக்கங்களால் ஏற்பட்ட பலவீனம், அளவுக்கு அதிகமாக குடிப்பதால் ஏற்பட்ட உடல் பலவீனம் போன்ற ஆண்களின் பிரச்சினைக்கு சிவப்புப் பவளமும் கனகபுஸ்பராகமும் அணிந்து கொண்டு மீண்டும் இழந்த வலிமையை அடையலாம்.

### தூக்கமின்மை

பலவிதமான கவலைகளாலும் மன உளைச்சல்களாலும் வேறு பல காரணங்களினாலும் இந்தக் குறைபாடு நோய் உண்டாகின்றது. இதைப் போக்குவதற்கு மரகதப் பச்சைக் கல், சந்திரகாந்தக் கல் மற்றும் கனக புஸ்பராகம் ஆகிய மூன்று கற்களையும் சேர்த்து அணிந்து வந்தால் இவைகளில் இருந்து நிவாரணம் அடையலாம்.

### போலியோ

போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாதம் குழந்தைகளுக்கு ஏற்பட்டால் இந்திர நீலத்தை (1 1/2 கரட் எடை) மோதிரமாக அணிவிக்கலாம். இரும்புக் காப்பும் சேர்த்து அணியலாம். பெரியவர்கள் இடது சிறு விரலில் தாமிர மோதிரமும் நான்கு கரட் எடையில் பவளமும் வலது கையில் அணிந்து கொண்டால் இந்த நோயைக் கட்டுப்படுத்தி குணமடையலாம்.

### கண்பார்வைக்குறைவு

கண்கள் மங்கலாய் தெரிதல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கு மாணிக்கம், வெள்ளை முத்து சேர்த்து அணியலாம். கண்களில் ஏற்படும் கட்ராக்ட் மற்றும் வயதான காலத்தில் பார்வை மங்குதல், நீர் வடிதல், பார்வைக்குறைவு ஆகியவற்றிற்கு பச்சைக் கல் உபயோகித்தல் கூடிய வரை இவைகளைக் கட்டுப்படுத்தலாம். வெள்ளைப் பவளமும் பார்வைக் குறைவை குணமாக்கும் தன்மை உடையது.

### காது மந்தம்

காது மந்தம் ஏதாவது நோய் வந்து காது கேளாது இருத்தல் மற்றும் காது சம்பந்தமான கோளாறுகளுக்கு ஆறு கரட் எடை உள்ள சிவப்புப் பவளமும் மற்றும் பச்சைக் கல் வைத்து தனியாக நடுவிரலிலும் மோதிரவிரலிலும் அணிய வேண்டும். இதுபோன்ற பலவிதநோய்களுக்கு சில குறிப்பிட்ட இரத்தினங்களை அணிவதன் மூலம் நிவாரணம் அடையலாம்.

மனிதர்கள் தங்களுக்கு நோய் அல்லது வலி வந்தவுடன் உடனடியாக நிவாரணம் அடைய வேண்டும் என்று பலவித மருந்துகளையும் பயன்படுத்துவார்கள். இந்த இரத்தின சிகிச்சையானது உடனடியாக நிவாரணத்தை கொடுக்கவிட்டாலும் மிகக் குறுகிய கால கட்டத்தில் படிப்படியாக நிவாரணத்தை கொடுக்கும்.

ஆனால் இரத்தினங்களை நம்பிக்கையுடன் அணிய வேண்டும் என்பது மிக முக்கியமானது. கூடியவரை இரத்தின சிகிச்சைக்காக செய்யப்படும் மோதிரங்கள் சுத்த வெள்ளியால்தான் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் விரைவில் பலன்களை பெற முடியும்.

கழுத்தில் பென்ரனாக இரத்தினத்தை அணிவதென்றாலும் வெள்ளியிலேயே பென்ரன் செய்து அணியவும் ஆங்காங்கே எடை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள நோய் களுக்கு மட்டும் குறிப்பிட்ட அளவு எடையுள்ள இரத்தினங்களை பயன்படுத்தவும் எடைகுறிப்பிடாத போதுஉபயோகப்படுத்தப்படும் இரத்தினங் கள் குறைந்தது 2 கரட் எடையாவது இருக்க வேண்டும்.

இரத்தினச் சிகிச்சை முறையில் முக்கியமான சிலவற்றையே இங்கு கொடுத்துள்ளேன். இரத்தினங்கள் அதிர்ஷ்டத்தை கொடுப்பதோடு மனிதனுக்கு வரும் நோய்களையும் குணப்படுத்துகிறது. எனவே இறைவனால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் மணிகளாகும். எனவே அனைவரும் தவறாமல் இரத்தினங்களை முறையுடன் பயன்படுத்தி வாழ்வில் வெற்றியையும், ஆரோக்கியமான வாழ்வையும் அடைய முடியும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புன்னாலைக் கட்டுவன் வடக்கு (கடவத்தறை)

## அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

## மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்

**23.01.2013**

**நேரம் : 6.30-7.35**

### தல வரலாறு

ஈழ மணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் தெற்கில் தெய்வ மணம் கமழும் புண்ணிய பூமியாக விளங்கும் புன்னாலைக்கட்டுவன் பதியாம் ஒல்லாந்தர் காலத்தில் ஐயனார் கோவில் ஒன்று பொன்னாலே கட்டப்பட்டது. அதனால் எல்லோராலும் பொன்னாலைக்கட்டுவன் என்று அழைக்கப் பட்டது. பின்னர் அது மருவி புன்னாலைக்கட்டுவன் எனும் நாமம் வரக் காரணமாயிற்று.

இங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் தாய் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் இது வாகும். ஆலயம் சுமார் 12 பரப்பு நிலத்தில் அமைந்துள்ளது. கடந்த 30 வருட காலமாக போரினால் பாதிக்கப்பட்டிருந்த திருத்தலம் ஆலய பரிபாலன சபையினரின் பெரும் முயற்சியால் முழுதாகப் புனராவர்த்தன பிரதிஷ்டா செய்யப் பட்டு ஏனைய பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், சந்தான கோபாலர், மஹாலட்சுமி, நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகளின் தெய்வீகத்துணையுடன் சிவப்பிரம்மஸ்ரீ சி.கிருஷ்ணசாமி சிவாச்சாரியார் தலைமையில் நவ குண்ட மகாயாக கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

பாவப்பிணிகளில் உழலும் ஆன்மாக்களின் குறைதீர்க்கும் தாயின் அருட்காட்சியை காண இம்மனிதப்பிறவி எமக்குப் போதாது. அதனைக்காண எமக்கு வாய்ப்புக் கிடைப்பின் அதுவே நாம் செய்த பாக்கியமே.

### பிரதிஷ்டா குருவின் அருளாசி



ஈழமணி நாட்டின் புண்ணியபூமியாம் புன்னாலைக் கட்டுவனில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு இன்று மங்களகரமான மகாகும்பாபிஷேகத்தை பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நிகழ்த்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்புண்ணிய தினத்திலேயே எனது குரு அருளும் எம்பெருமாட்டியின் திருவருளும் இவ்வூர் மக்களுக்கும் பக்தர்களுக்கும் கிடை க்க அம்பாளின் திருவடி பணிகின்றேன்.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உவகமெலாம்*

ஆகம பிரதிஷ்டா- வித்வஜோதி
*சிவப்பிரம்மஸ்ரீ சி.கிருஷ்ணசாமி சிவாச்சாரியார்.*

### பெருமகிழ்வடைகின்றோம்

புன்னாலைக்கட்டுவன் கடவத்தறை அருள் மிகு இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருப் பணிகள் நிறைவுபெற்று புதிய தோற்றத் துடன் இன்று குடமுழுக்கு நடைபெறுவத னையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அம்பாள் எல்லோருக்கும் எல்லா வரங்க ளையும் அருள்பாலிக்கட்டும்.

அ.சத்தியமூர்த்தி
ஆலய பரிபாலன சபைத் தலைவர்.

### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



புன்னாலைக்கட்டுவன் கடவத்தறையில் வீற்றிருந்து அருளாசிபுரியும் அம்பாளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடை பெறுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். நீண்ட பழைமையான இந்த ஆலயத்தில் தமிழறி ஞர் கணே சையா போன்றோர் வழிபாடு செய்த சிறப்புடைய தாகும். எல்லா வரங்களை யும் தரும் அம்பாள் மக்களுடைய வேண்டு தல்களை நிறைவுசெய்கின்ற சிறப்புடையவள் ஆவாள். இவளுடைய கும்பாபிஷேகத்தை தரிசித்து அனைவரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

**மலரமைப்பு : சீ.ஞானேஸ்வரன்,**
(அலியன்ஸ் இன்சுரன்ஸ்)

### ஆசிச்செய்தி



புன்னாலைக்கட்டுவன் கடவத்தறையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திலே இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகிறேன். சிறப்புமிக்க அம்பாள் ஆலயம் நீண்டகாலமாக கும்பாபிஷேகம் நடைபெறாதிருந்து இந்த வருடம் ஆலயம் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேகம் சிறப்பான முறையிலே நடைபெற அம்பாள் சிறந்த முறையிலே அருள் பாலிக்கவேண்டும் என வாழ்த்திக்கொள்கின்றேன்.

பொன்.பாலகுமார்
இலங்கை வங்கி முகாமையாளர், சுன்னாகம்.


இருளை நீக்கிட வருவாயம்மா...... கும்பாபிஷேகம் சிறப்புற பிரார்த்திப்போர்

Sriram Hardware
Palaly Road, Kondavil Junction
T.P: 0779898541

Vikneswara Paints & Electrical
170, Palaly Road, Kondavil.

V.M.K. Brothers
Palaly Road, Kondavil Junction, Kondavil.

அம்பாள் ஸ்ரோர்
பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

பகமை வேளாண் வாணிபம்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

Aashaa Merchant Centre
*No.137, Palaly Road, Thirunelvely.*

சிவகுரு பல்பொருள் வாணிபம்
ஏழாலை வடக்கு
T.P: 0217538245

பிரியங்கா கபே & பிரியங்கா புக் சென்ரர்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

மங்கையர் மனங்கவர்ந்திடும் தரமான ஆடைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
ஜெயலக்ஸ்மி ரெக்ஸ்ரைல்ஸ்
இல.17A, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
T.P: 0779353100

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
No.105, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6959

கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி றோட், உரும்பிராய்ச் சந்தி.
T.P: 0772288245

ஸ்ரீ - 2212


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றப் பிரேரணையை ஆதரித்த எம்.பிக்கள் நீதிமன்றை நடத்தத் தீர்மானம்- மனுஷ எம்.பி

அரசியல் குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களினால் தமக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையின்னை ஆட்சேபித்து நீதிமன்றம் செல்ல தீர்மானித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி இது குறித்த வாக்கினை நாம் அளித்தோம். அதற்கு மறுதினம் 12 ஆம் திகதியிலேயே ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டது.

எனவே, இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயல். ஏற்கனவே 18 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு நாம் ஆதரவு வழங்கப்போவதாக தெரிவித்த போதும் இதேபோன்ற நடவடிக்கை எமக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் தற்சமயம் ஸ்ரீ கொத்தா தலைமையில் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாக தெரிவாகி அரசாங்கத்துடன் இணைந்து குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களுக்கு எதிரான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதவிர 2013 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்புக்கள் குறித்தும் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. (அ-2)

## அமெரிக்காவை திட்டுவோர் டொலர் வாங்க தவறுவதில்லை

### ஐ.தே.க. பொதுச்செயலாளர் கிண்டல்

(கொழும்பு)

குற்றப்பிரேரணை நடவடிக்கை குறித்து அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அமெரிக்காவை திட்டித்தீர்க்கும் அதேவேளை அமெரிக்காவிடம் இருந்து டொலர்களை மில்லியன் கணக்கில் கடன்பெறுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும் தற்போது தகவல்களின் படி பல முக்கிய நாடுகள் அதில் பங்கேற்காது என்ற அச்சம்"எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றப்பிரேரணை குறித்த அரசின் நடவடிக்கையால் இந்நிலை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். ராஜபக்ஷ அரசாங்கம் சொல்வதொன்று செய்வதொன்று என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவை நியமிப்பதில் சிக்கல் இல்லை என அவர் கூறியுள்ளார். இது குறித்து தலைவர் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கட்டாரிலும் இலங்கையருக்கு மரண தண்டனை வழங்கத் தீர்ப்பு

### விடுவிக்கும் நடவடிக்கையில் இலங்கை

(கொழும்பு)

இந்தியப் பிரஜையொருவரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை பிரஜையொருவருக்கு கட்டார் அரசாங்கம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த குறித்த நபருக்கெதிராகவே கொலைக் குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு நீதிமன்றம் ஷரீஆ சட்டத்தின்படி மரண தண்டனை விதித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபரை மரண தண்டனையிலிருந்து விடுவிப்பதற்கு தேவையான செயன்முறைகளை அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் மூதூர் பிரதேசத்தை சேர்ந்த ரிஸானா நபீக் என்பவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

இவரை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள தாம் அனுமதி கேட்டும் தமக்கு அனுமதி கிடைக்கவில்லை என அசாத் சாலி குற்றம் சுமத்தியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

## ரிஸானா விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்

### அமைச்சர் டிலான் கோரிக்கை

(கொழும்பு)

சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானாவின் விவகாரத்தை குறுகிய அரசியல் நலனுக்கு பயன்படுத்த வேண்டாமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எத்தனையோ இராஜதந்திர மற்றும் மனிதாபிமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ரிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது என்றும் அவர் கூறினார்.

ஷரிஆ சட்டத்தின் படி குற்றம் செய்தவருக்கு ஒரு வருடத்துக்குள் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவரின் கருத்தை விமர்சித்த பெரேரா முன்னாள் வெளி விவகார அமைச்சர் ரோஜித்த போகொல்லாகம, பிரதி அமைச்சர் ஹீன்சன் பைலா, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான, றியாத் ஆளுநர், நீதி அமைச்சர் ஹக்கீம், சவுதியிலிருந்த அமெரிக்கா, ஓமான் தூதுவர்கள் மற்றும் பல மார்க்க அறிஞர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரிஸானாவின் உயிரைக் காப்பாற்றும்படி சவுதி மன்னரிடம் கேட்டிருந்தனர்.

தனது மன்னிப்பின் மூலம் ரிஸானாவின் உயிரைக் காப்பாற்றி இருக்கக் கூடிய ஒரே ஒரு ஆளான இறந்த குழந்தையின் தாய், ரிஸானா இறக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தார். இதனால் இவர் சவுதி மன்னர் கேட்டும் கூட மன்னிப்பை வழங்கவில்லை.

சில அரசியல் வாதிகள் சவுதி தூதரகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டங்களும் அப்பெண் இரக்கமில்லாத நிலைப்பாட்டை எடுக்கக்காரணமாகி இருக்கலாம் என அவர் கூறினார். (அ-2)

## ரிஸானா நபீக்கின் கொலை தொடர்பில் முஸ்லிம் தலைவர்களின் நடவடிக்கை என்ன?

### கேள்வி எழுப்புகிறார் பிரபா எம்.பி

(கொழும்பு)

ரிஸானா நபீக் சவுதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்டது தொடர்பாக இந்நாட்டிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்க்கும் பொழுது வியப்பாகவும் கேவலமாகவும் உள்ளது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ரிஸானா நபீக் குறைந்த வயதிலே வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது சம்பந்தமாக அனுப்பி வைத்த முகவர் கைது செய்யப்பட்டார். இருப்பினும் இவரது இந்த நிலைக்கு காரணமாக அனுப்பி வைத்த முகவரை மட்டும் நான் பார்க்கவில்லை. மாறாக இவரது பெற்றோர்களும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக முஸ்லிம் தலைவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? ரிஸானாவுக்கு அமெரிக்கா அல்லது ஏனைய மேற்குலக நாடுகள் மூலமாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தால் வெள்ளிக்கிழமை நாளில் மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் பயந்து ஓடும் அளவிற்கு பலவிதமான போராட்டங்களை அரசாங்கத்திலிருக்கும் முஸ்லிம் தலைவர்களும் எதிர்க்கட்சியிலிருக்கும் முஸ்லிம் தலைவர்களும் ஒன்றிணைந்து கொழும்பு நகரத்தை ஸ்தம்பிதம் அடையும் அளவிற்கு கொண்டு சென்றிருப்பார்கள்.

ஆனால், நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை முஸ்லிம் நாடான சவுதி அரேபியாவில் இடம்பெற்றதனால் இன்று வாய் மூடி மௌனித்திருப்பது ஏன்? சவுதி அரேபியா தூதரகத்தின் முன் இவர்களால் ஏன் ஒரு ஆர்ப்பாட்டத்தினையாவது நடத்த முடியவில்லை.

எதிர்காலத்தில் முஸ்லிம் தலைவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் நம்பகத்தன்மை உள்ளதா என தெரிந்து கொண்டு அதற்கு முஸ்லிம் மக்கள் துணைபோக வேண்டும். இன, மத பேதமின்றி அநீதி எங்கு நடக்கின்றதோ அது எந்த நாடாக இருந்தாலும் அதற்கெதிராக நேர்மையான முறையிலே குரல் கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஹெரோயின் வைத்திருந்தவர் கிரான்ட்பாஸில் கைது

(கொழும்பு)

கொழும்பு- கிரன்ட்பாஸ் சந்தியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக பொலிஸாரால் இவர் நேற்று முன்தினம் இரவு 9.10 மணி அளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து ஒரு கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். கொழும்பு துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)



கோப்பாய் ஆசிரிய கலாசாலை உடலாளர் மன்றத்தின் ஆதரவுடன் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர்கள் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவதையும் வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவின் பயன்பாட்டுக்கென இரத்தம் பரிசோதிக்கும் கருவி ஒன்றை கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை வைத்திய கலாநிதி எஸ்.பரமேஸ்வரனிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளை அனுசரிக்கப் பழகிக் கொண்டால் இந்த உலகம் உங்களுக்கேற்ற பூங்காவாக விளங்கும்.
– சார்ல்ஸ் டிக்கின்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் முயற்சியில் ஈடுபடுங்கள்

தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரில் இருவர் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டமை மனதிற்கு ஆறுதலைத் தருகின்றது.

அதேநேரம், ஏனைய இரு மாணவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்ற நம்பிக்கையை நேற்றையதினம் இடம்பெற்ற மாணவர்களின் விடுதலை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தை மீண்டும் இயங்கவைப்பதில் வழங்கிய ஒத்துழைப்பு மாணவர்களின் விடுதலைக்கு உதவியதென்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மீண்டும் இயங்குகின்ற நிலையில் ஏனைய இரு மாணவர்களையும் விடுதலை செய்வது அவசியமாகின்றது.

மாணவர்களின் விடுதலை குறித்து மாணவர்களின் பெற்றோர்கள், பல்கலைக்கழக சமூகம் மற்றும் தமிழ் மக்களிடம் எங்ஙனம் மன ஆறுதலை ஏற்படுத்தி உள்ளதோ அதுபோன்று நேர்த்தன்மையுடைய பல விடயங்களை அரசும் படைத்தரப்பும் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் மனங்களை வெல்லமுடியும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் பகைமை கொண்டவர்கள் அல்ல.

மாறாக ஆட்சியும் உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையிலேயே இரு இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வலுப்பெற்றன.

இத்தகைய முரண்பாடுகள் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக அவை வளர்க்கப்பட்டன. இதற்கு அரசியல்வாதிகளே வேதம் ஓதி யாகம் வளர்த்தனர்.

இத்தகைய நிலைமை மாற்றப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவது அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது என்பன ஓர் அரசின் கடமை என்றவாறு செய்யப்பட வேண்டும்.

இத்தகைய செயல்களைச் செய்யும்போது தமிழ் மக்கள் யதார்த்த நிலையை உணருவர்.

இதன்போது தேவையற்ற பிரசாரங்கள் என்று அரசு கருதுகின்ற விடயங்கள் செயலிழந்து போகும்.

இதைவிடுத்து தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பது, தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகளை பிரதிஷ்டை செய்வது என்பன சிங்கள மக்கள் தொடர்பில் தமிழ் மக்கள் அவநம்பிக்கை கொள்ளச் செய்கின்றது.

இப்போதுகூட வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் படைத்தரப்பால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஒரு மருத்துவர் தமிழன் என்ற பெயரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரிய மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயகப் பண்போடு நேர்மையோடு கேள்வி கேட்ட ஒரு மருத்துவர் இந்த நாட்டிற்கு மிகவும் அவசியமானவர்.

அத்தகைய நேர்மையானவர்களை– வெளிப்படைத்தன்மை உடையவர்களை கைது செய்வதென்பது மிக அபத்தமான செயல்.

எனவே, டாக்டர் சிவசங்கரை உடனடியாக விடுதலை செய்வதும் தமிழ் மக்களின் மனங்களை வெல்லவேண்டிய பல் வகைமைகளில் ஒன்றாகும்.

## வித்தகபுரம் நவக்கிரி கிராம மக்கள் பலருக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை

வித்தகபுரம் நவக்கிரி கிராமத்தில் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றபோதும் பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டமோ மின் இணைப்புக்களோ முறையாகப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து கடந்த ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட குறித்த பகுதிகளில் கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியேறியுள்ளனர்.

மிகவும் பாதிக்கப்பட்டு எந்த வசதிகளும் அற்ற இம்மக்கள் முறையற்ற வீட்டுத் திட்டத்தால் மேலும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்ட வீட்டுத் திட்டத்திற்கு பதிவு செய்த அனைவருக்கும் சீரான முறையில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமான வீட்டுத் திட்டம் வழங்கும்போது சில குடும்பங்களுக்கே வீடுகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மின்சார இணைப்புக்களுக்காக மக்களிடம் இருந்து படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டபோதும் பல மாதங்கள் கடந்த நிலையிலும் மின் இணைப்பு செய்யப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றன.

மின்சாரம் வழங்கப்படும் என நம்பி பெருந்தொகைப் பணத்தில் மின் இணைப்புக்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் மின்சாரம் வழங்கப்படாமையால் குறித்த மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகக்கூறுகின்றனர்.

எனவே தமக்கான வீட்டுத் திட்டம் மற்றும் மின் இணைப்பைத் துரிதப்படுத்தி கரிசனையோடு செயற்படுமாறு உரிய அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-5-28)

## கொலைக்குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு நீதிமன்று பிணை வழங்கியது

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்தவரை வெளியே அழைத்து கத்தியால் வெட்டிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபரினை யாழ்.மேல்நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

கடந்த வருடம் வைகாசி மாதக் காலப் பகுதியில் திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு முன்பாக புவனேந்திரன் ரஜீவன் என்பவர் மிகக் கொடூரமான முறையில் இரவு வேளையில் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் திருநெல்வேலி கிழக்கு மாரியம்மன் கோவில் பகுதியில் வசிக்கும் பொன்னம்பலம் நல்லைநாதன் என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். பின்னர் இவருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த சந்தேகநபர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி பிணையில் விடுவிக்குமாறு கோரி பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றையதினம் யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபரின் சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தினை பரிசோதித்த ஆணையாளர்பிணை அனுமதியினை வழங்கினார். அதன்படி 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்ததோடு ஒவ்வொரு மாத கடைசி ஞாயிற்றுக்கிழமையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிக்குள் கையொப்பமிடல் வேண்டும் என்ற பிணை நிபந்தனையும் விதித்தார்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி தி.காண்டீபனும் ஆஜராகி இருந்தனர். (அ-4)

## புனர்வாழ்வளிக்கப்பட்டோருக்காக சமூக நலன்புரி இணைப்பு வேலைத்திட்டம்

### யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

இராணுவத்தினரால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டோரின் நலன்கருதி புனர்வாழ்வு பெற்றவர்களின் பொருளாதார சமூக மற்றும் நலன்புரி தொடர்பான இணைப்பு வேலைத்திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக யாழ்ப்பாணத்தில் காரியாலயம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட செயலகத்திலேயே இந்த காரியாலயம் செயற்படவுள்ளது என்று புனர்வாழ்வு ஆணையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு ஆணையக தலைமைச் செயலகம் மற்றும் புனர்வாழ்வு சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டிலேயே மேற்படி காரியாலயம் திறக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இணைந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாதுகாப்பு தரப்பினரால் கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களுக்காகவே இந்தக் காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்பில் கண்டறிதல், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாட்டுக்குப் பயனுள்ள ஒரு நற்பிரஜையாக உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே மேற்படி அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

இதனூடாக புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் சிவில் சமூகம் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் எதிர்பார்க்கப்படும் வேலைத்திட்டங்களிலும் பார்க்க வியாபித்ததொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதே நோக்கமாகும் என புனர்வாழ்வு ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ-6)

## அடிக்கல்நாட்டு விழா

(தும்பளை)

கலை கலாசார அமைப்பான புலோலி பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல்நாட்டு விழா இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு மன்றத் தலைவர் க.ப. ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஞானசம்பந்தர் கலைமன்ற கொழும்புக்கிளை தலைவர் மு.யோகநாதன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் ந.செவ்வேள், பருத்தித்துறைபிரதேசசெயலககலாசார உத்தியோகத்தர் செல்வி எஸ்.செல்வசுகுணா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-5-19)

## மணவாளகோல திருவிழா


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மணவாளக் கோலத் திருவிழாவும் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சிப் பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 9.30 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதலும் நடைபெறும் [illegible] (அ-3)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தற்பெருமை அழிவைத்தரும்



மருத்துவர்கள் நோயாளிகளிடம் எனக்கு வியாதியே இல்லை என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதக நிலை உண்டாகிறது. அதுபோல இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக்கொண்டால் சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகி விடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டால் அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால் களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்துவிடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள் சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்குக்கூட சலனமடையும்.

குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன் குருவின் பெயரைச் சொல்லிக்கொண்டே ஆற்றின்மீது நடந்து போனான். இதைக்கண்ட குரு என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கின்றதென்றால் எனக்கு எவ்வளவு சக்தி இருக்கவேண்டும், இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால் கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால் தற்பெருமை அழிவைத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னியில் அதிர்ஷ்ட மழை பெய்தது

இலங்கை - அவுஸ்திரேலியா மோதிய நான்காவது ஒருநாள்போட்டி கைவிடப்பட்டதால், ரசிகர்களுக்கு ஒரு ருவென்ரி 20 போட்டிக்கான டிக்கெட் இலவசமாக வழங்கப்படும், என, அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்திருக்கிறது.

அவுஸ்திரேலியா, இலங்கை அணிகள் சிட்னியில் மோதிய, நான்காவது ஒருநாள் போட்டி மழை காரணமாக இரத்துச்செய்யப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் 26 , 28 ஆம் திகதிகளில் சிட்னி, மெல்பேர்னில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு ருவென்ரி-20 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் சிட்னி போட்டிக்கு ரசிகர்களுக்கு இலவச டிக்கெட் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கிரிக்கெட்சபையின் பொது முகாமையாளர் மைக் மெக்கன்னா கூறுகையில்,

மழை காரணமாக போட்டி பாதிக்கப்பட்டது துரதிருஷ்டவசமானது. போட்டி இரத்து செய்யப்படும் வரை, ரசிகர்கள் உற்சாகமாக கண்டுகளித்தனர். இவர்களுக்கு எதாவது செய்யவேண்டும். இதனால், இப்போட்டிக்கு வந்த ரசிகர்களுக்கு, சிட்னி ருவென்ரி-20 போட்டிக்குரிய டிக்கெட் இலவசமாக வழங்கப்படும். இதை இ-மெயில் மூலம் மட்டும்தான் பெறவேண்டும் என்றார்.

## 44 ஆவது தடவையாக இறுதியாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ்



ரஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிச்சுற்றுக்கு 44ஆவது முறையாக மும்பை அணி முன்னேறியது. சர்வீசஸ் அணிக்கெதிரான அரையிறுதியில் முதல் இன்னிங்சில் பெற்ற முன்னிலை அடிப்படையில் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இறுதியாக 2009-10ஆம் ஆண்டு நடந்த இறுதியாட்டத்தில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் கர்நாடகாவை வீழ்த்தியது.

இறுதியாட்டம் ஜனவரி. 26-30ஆம் திகதிகளில் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நடைபெற உள்ளது. இதில், இதுவரை 39 முறை கிண்ணத்தை சுவீகரித்த மும்பை அணி, 75 ஆண்டுகளில் முதன் முறையாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய சவுராஷ்டிரா அணியை எதிர்கொள்கிறது.

## 4 ஆவது ஒருநாள் போட்டி; ரிக்கெட் விலை 3 மடங்கு அதிகரித்தது!



இந்தியா - இங்கிலாந்து மோதும் நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டி இன்று மொகாலியில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான டிக்கெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது, கடந்த 2011இல் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் இங்கு மோதிய உலகக் கிண்ண அரையிறுதி போட்டிக்கான டிக்கெட் விலையை விட அதிகம்.

இதன்படி, மாணவர்கள் அமர்ந்து பார்க்கும் பகுதிக்கான டிக்கெட் விலை, கடந்த போட்டியை விட மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் ரிக்கெட்டுக்களின் விலையும் அதிகரித்தமையால் கிரிக்கெட் ரசிகர்கள் பலர் விசனமடைந்துள்ளனர்.

## மீண்டும் இணைந்தார் வெர்னான் பிலேண்டர்

பாகிஸ்தான் அணியுடன் முதல் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் வெர்னான் பிலேண்டர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளமை அணிக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்ய உள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி (ஜன. , மார்ச்) 3 டெஸ்ட், 2 ரி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளது. முதல் டெஸ்ட் போட்டி ஜோகன்னஸ்பர்க் நியூ வாண்டரர்ஸ் மைதானத்தில் பெப். முதலாம் திகதி ஆரம்பமாகிறது.

இதில் நியூசிலாந்துடன் நடந்த டெஸ்ட் தொடரின் போது காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் வெர்னான் பிலேண்டர், மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

*தென்னாபிரிக்க அணி: கிரீம் ஸ்மித் (தலைவர்), ஹாஷிம் அம்லா, டிவில்லியர்ஸ், டுபிளெஸ்சிஸ், டீன் எல்கர், ஜாக் காலிஸ், ரோரி கிளெய்ன்வெல்ட், மார்னி மார்கெல், அல்விரோ பீட்டர்சன், ராபின் பீட்டர்சன், வெர்னான் பிலேண்டர், ஜேக்கஸ் ருடால்ப், டேல் ஸ்டெயின்.*



அர்ஜுன்

## அணியில் இருந்தும் விளையாடாத சச்சின் மகன் அர்ஜுன்

இந்திய அணியின் சாதனை வீரர் சச்சின் சமீபத்தில் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது மகன் அர்ஜுன் டெண்டுல்கரும், கிரிக்கெட் அரங்கில் சகலதுறை வீரராக பிரகாசித்து வருகிறார். உள்ளூர் ஜிம்கானா அணி சார்பில் விளையாடிவரும் இவர், அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட 14 வயதுக்குட்பட்டோருக்கான மும்பை அணியில் இடம்பிடித்தார்.

இவரை விட சிறப்பான வீரர்கள் இருக்க, சச்சின் மகன என்பதால்தான் அணியில் வாய்ப்பு தரப்பட்டது என சர்ச்சை எழுந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் குஜராத் அணிக்கு எதிரான போட்டி நடைபெற்றது. இதில் முதலில் களமிறங்கிய குஜராத் அணிக்கு ஹெட் படேல் அதிகபட்சமாக 48 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க, 9 விக்கெட்டுக்கு 129 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மும்பை சார்பில் அக்னி சோப்ரா, தனுஷ் கோடியன், த்ருவ் விவேக், ஆஜிம் ஷெய்க் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதில் மும்பைக்காக களமிறங்கிய பதினோரு வீரர்கள் கொண்ட அணியில் அர்ஜுன் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், இதுகுறித்த வருத்தம் எதுவும் இல்லாத அர்ஜுன், களத்துக்கு வெளியில் இருந்த வாங்கில் இருந்து கொண்டு, வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்.

## நியூசிலாந்துத் தொடரில் ஸ்டுவர்ட் பிராட்



இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட், இந்தியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்டில் பங்கேற்ற இவர், காயம் காரணமாக 3, 4ஆவது டெஸ்டில் பங்கேற்காமல் நாடு திரும் பினார்.

இதனால் மூன்று ஒருநாள் போட்டிக்கான அணியிலும் சேர்க கப்படவில்லை. இவர் இல்லாமல் சமாளித்து விடலாம் என நினைத்த இங்கிலாந்து அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இப்போது ஒருநாள் தொடரில் 1-2 என, பின்தங்கியுள்ள இந்த அணிக்கு பந்துவீச்சில் கைகொடுக்க, வேகப பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் வருவதாக இருந்தது.

ஆனால் மோசமான பனி காரணமாக லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் அடுத்தடுத்து பல விமானங்கள் புறப்படுவது இரத்தானது. இதையடுத்து இந்தியாவுககு எதிரான மீதமுள்ள இரு போட்டிகளில் இவர் பங்கேற்க மாட்டாராம்.

இதுகுறித்து ஒருநாள் அணியின் பயிற்சியாளர் ஆஸ்லே ஜைல்ஸ கருத்து வெளியிடும்போது,

எப்படியும் பிராட் அணிக்கு வந்து புத்தெழுச்சி கொடுப்பார் என எதிர்பார்த்தோம். ஆனால், மோசமான வானிலை மற்றும் விமான நிலையத்தில் இருந்த பல பிரச்சினைகளால், இந்தியா வர முடியவில்லை. அடுத்த நியூசிலாந்து தொடரில் இவர் பங்கேற்பார் என்றார்.

## கிளார்க் காயம்



இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின 5ஆவதும், இறுதியுமான போட்டி இன்று நடைபெறுகிறது.

இதில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் பங்கு கொள்வது கேள்விக்குறியாகவுள்ளது. நேற்று இடம்பெற்ற பயிற்சியின்போது அவர் முழங்காலில் காயமடைந்ததையடுத்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

## ஹசியின் ஓய்வு எனக்கு அதிர்ச்சி!




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் ஒருவரான மைக் ஹசி சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இலங்கைக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் விளையாடியதே அவரது கடைசி டெஸ்ட் ஆகும்.

இந்த நிலையில் மைக் ஹசியின் ஓய்வு தனக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக அவுஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:- ஹசியின் துடுப்பாட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. அவர் ஏன் ஓய்வு முடிவை எடுத்தார் என்று தெரியவில்லை. அவரது நண்பர் என்ற முறையில் எனக்கே அவரது திட்டம் தெரியாது. அவரது இந்த முடிவு அதிர்சசியை ஏற்படுத்தியது என்றார்.

## தாவினார் கும்பிளே



ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட போட்டியில் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் கர்நாடக கிரிக்கெட் சங்க செயலாளருமான கும்பிளே பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணியின் தலைமை வழிநடத்துநராக இருந்து வந்தார். அவர் திடீரென பெங்களூர் அணியில் இருந்து விலகி மும்பை இந்தியன்ஸ் அணியில் தலைமை வழிநடத்துநராக ஒப்பந்தமாகி இருக்கிறார்.

## பீட்டர்சனுக்கு மிரட்டல்!



இந்தியா-இங்கிலாந்து மோதிய 3 ஆவது ஒருநாள் போட்டியில் நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த, இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சனுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.ராஞ்சி விமான நிலைய கழிவறைக்கு செல்கையில் பீட்டர்சனிடம் இந்த அதிகார பூர்வமற்ற எச்சரிக்கையை போட்டி நடுவர் விடுத்ததாக அணியின் பயிற்சியாளர் ஆஷ்லே ஜிலெச் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பு தென்னாபிரிக்கா பயணம்


எதிர்வரும் 27-ம் திகதி இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு தென்னாபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொள்ளவுள்ள இந்தக் குழுவில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இனவிவகாரங்கள், நல்லிணக்க முயற்சிகள் தொடர்பிலான தென்னாபிரிக்காவின் அனுபவங்களை கற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவுக்குச் சென்றிருந்தபோது, தென்னாபிரிக்காஅரசியல் கட்சிகள் விடுத்திருந்த அழைப்பின் பேரிலே இந்தப்பயணம் இடம்பெறவுள்ளது. (எ-11)

# என்ன கொடுமை சரவணா...!



யாழ்ப்பாணம், அராலி, கல்லுண்டாய்வெளி பிரதேச வயல் நிலங்களில் மாடுகள் மேய்ந்தால் அந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டு வருகின்றது. இதற்கென கிராம சேவகர்களின் கீழ் ஒரு அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்படி வயல் நிலங்களைக் கடந்து மேய்ச்சலுக்காக மாடுகளைக் கொண்டு செல்லும் மாட்டு உரிமையாளர்கள், மாட்டுகளில் வாய்களில் தண்ணீர் போத்தல்களைக் பொருத்தி அழைத்துச்சென்று மேய்ச்சலிடத்தில் விடும்போது மட்டும் அவற்றை அகற்றி விடுகின்றனர்.

# திருக்கோவிலில் ஆயுதம் மீட்பு

திருக்கோவில் ; தம்பட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வீட்டின் உரிமையாளர் முற்றத்தை துப்புரவு செய்து கொண்டிருந்தபோது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டுள்ளார்.

உடனே பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து : சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் ரி- 56 ரக துப்பாக்கி, 3 மகசீன்கள், 50 ரவைகள் ஆகியவற்றை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டு உரிமையாளர் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து 2 வருடங்களுக்கு முன்னரே அவ்வீட்டில் குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)



# மண்டைதீவு தில்லேஸ்வரர் ஆலய அறிவித்தல்

மண்டைதீவு தில்லேஸ்வரம் எனும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளும் ஸ்ரீ சிவகாம வல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானின் ஆலயப் புனரமைப்புப் பணிகள் தைப்பூச தினமாகிய 27.01.2013 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

யுத்தகால சூழ்நிலையால் கடந்த 22 வருடங்களாகப் பூசை வழிபாடு இல்லாதிருந்த இச் சிவாலயத்தின் சகல உடைமைகளும் இல்லாது போயுள்ளதுடன் ஆலயக் கட்டடங்களும் புனரமைக்கப்படவேண்டியுள்ளன.

சைவப் பெருமக்களின் பேருதவியுடன் மேற்கொள்ளவுள்ள சிவாலய புனரமைப்பிற்கு , சைவப் பெருமக்களாகிய உங்களிடம் இருந்து உதவிகள் வேண்டப்படுகின்றன.

உங்கள் நிதி உதவிகளை சேமிப்புக் கணக்கு இல.

01602068125З

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம் என்ற வங்கிக் கணக்கினூடாக அல்லது 0770324040 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு உதவிகளை வழங்க முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

இ.தில்லைநாதன்
தலைவர்

கு.கனகசபாபதி
பொருளாளர்

ப.திருவருட்செல்வன்
செயலாளர்

ஆலய பரிபாலன சபை,
மண்டைதீவு தில்லேஸ்வரர் ஆலயம்.

பெண்களை ஏமாற்றி அனுப்பும்

# வெளிநாட்டு முகவர் நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் விநியோகிக்கப்படும் பதிவு முத்திரைகளுக்குச் சமனான போலி முத்திரைகளை ஒட்டி சில பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கு முயற்சித்த முகவர் நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு- மருதானை பிரதேசத்தில் உள்ள முகவர் நிலையம் ஒன்றின் உப முகவர் ஒருவரினாலேயே இந்த முறைகேடான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் போது பயண அனுமதிசீட்டுக்களை சட்டரீதியாக்குவதற்காக இந்த முத்திரைகள் பயன்படுத்தப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த முகவரால் தயாரிக்கப்பட்ட முத்திரைகள் இடப்பட்ட வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் இரண்டுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட போலிமுகவர் நேற்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ-11)

# வெடி பொருட்கள் மீட்பு

(கிளிநொச்சி)



கிளிநொச்சி செல்வா நகரில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

சேட் அமைப்பு வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பூநகரிப் பிரதேசங்களில் மிதிவெடிஅபாயக்கல்வியைவழங்கி வருகின்றது. செல்வா நகரில் நேற்று மிதிவெடி அபாயக் கல்வி பயிற்சியை வழங்கியபோது ஒரு தொகுதி வெடிக்காத வெடிநிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் பொது மக்களால் அடையாளம் காணப்பட்டன. உடனடியாக சேட் அமைப்பினரால் ஹலோ ரஸ்ட் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. விரைவில் இவ்வெடி பொருட்களை அகற்றித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக சேட் அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் இ.உமாபதி தெரிவித்தார். (எ)

# 48 மணி நேரம் தடுத்து...

பிடியாணையின்றி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஒருவரை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைப்பதற்காக 15 வகையான தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை:

கொலை, கொலையாகாத குற்றமுடைய மரணம் (கைமோசக் கொலை), கொலை முயற்சி, கொலை புரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல், தவறாக அடைத்து வைக்கும் நோக்கில் ஆளொருவரை ஆட்கடத்தல் அல்லது ஆட்கவர்தல், கடுங்காயத்திற்கு உட்படுத்தும் உளக்கருத்துடன் (நோக்கத்துடன்) ஆட்கடத்தல் அல்லது ஆட்கவர்தல், ஆளொருவரை மறைத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல், கற்பழிப்பு, மரணத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு புரியப்படும் திருட்டு, மரணம் அல்லது கடுங்காயம்விளைவிக்கும்வகையில்கொள்ளை, மரணம்விளைவிக்கக் கூடிய ஆயுதந் தாங்கிய படு கொலை, மேற்கூறப்பட்ட எவையேனும் தவறுகளுக்கு புரியும் முயற்சி, வெடிபொருட்களை, தீங்கு விளைவிக்கும் ஆயுதம் ஒன்றை அல்லது துவக்கு ஒன்றைப் பயன்படுத்தி புரியப்படும் தவறு, மேற்கூறப்பட்ட தவறொன்றுக்கு உடந்தையாகச் செயற்படல்

மேற்கூறப்பட்ட தவறொன்றுக்கு உடந்தையளிப்பதற்கு அல்லது தவறைப் புரிவதற்கு சூழ்ச்சி செய்தல்.

இந்த குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் 2012-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11-ம் திகதி நீதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, நீதிமன்றத்தின் உத்தரவின்றி சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் 48 மணி நேரம் தடுத்து வைக்கும் வகையிலான புதிய சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. (எ-11)

LAKELAND INTER-AMERICAN SCHOOL – JAFFNA
1st ANNIVERSARY

First productive 1st anniversary of the school will be on 25th January 2013.
**We are expanding with quality education for each child...**
**Special Discount** will be given to those who register **before 31.01.2013**
**BONANZA! DON'T MISS THIS OPPTUNITY!**

Jaffna Branch
No 154, Brown Road, Jaffna
T.P 021-2228700 / O21-2226242
FAX: 021-2225600
E-MAIL: aerojaf@gmail.com

Colombo Branch
No 9, Walagamba Mawatha,
Borupana Road,
Ratmalana. T.P 5534165

FAX: 5534166, Website: www.lakeland.lk, E-MAIL: inquiries@lakeland.lk

# மரண அறிவித்தல்

## ஞானமுத்து கிறிஸ்ரீனம்மா (மண்டைதீவு)

மண்டைதீவு 5-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.203, 3-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய அருகாமையில்) கொண்ட ஞானமுத்து கிறிஸ்ரீனம்மா 22-01-2013 செவ்வாய்க்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார். இவரது நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

203, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்: அருட்பணி ஞா.விக்ரர் பிலேந்திரன்
(மகன்)

(சி-2223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்...

களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு உள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரும் கலைப்பீட மாணவருமாகிய பா.தர்சானந்த், க.ஜெனமே ஜெயந்த் ஆகியோர் விரைவில் விடுதலை யாவர் எனவும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் துணைவேந்தர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை படையினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நான்கு பல்கலைக்கழக மாணவர்களில் இரண்டு பேர் நேற்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வி.பவானந்தன், விஞ்ஞான பீட 3-ம் ஆண்டு மாணவன் எஸ்.சொலமன் ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்றும், சிறிரெலோ என்ற அரச ஆதரவு அரசியல் கட்சியின் அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் குற்றம் சுமத்தி நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வுக்குட் படுத்தப்பட்டிருந்தார்கள். (எ-4)

## பேருந்துக் கட...

வருடாந்த கட்டணத்திருத்தங்களுக்கு அமைவாகவே இந்தக்கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது என்றும். அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, தனியார் பேருந்துக்கட்டணங்கள் கடந்த வருடம் மறுசீரமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தீர்வுத்திட...

தச்சட்டத்தைரத்து செய்யுமாறு கோரிவருகின்றன.

மறுபுறத்தில் சில கூட்டணிக்கட்சிகள் 13 ம் திருத்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளன.

இந்தியாவிற்கு உத்தியோபூர்வவிஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள, பீரிஸ் தமிழகத்தின் நெல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் இதனைத்தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துக்களை உதாசீனம் செய்து தீர்மானங்களை எடுப்பது சாத்தியமில்லை. இதேவேளை, யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த தமிழ் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

தமிழக மீனவர்கள் அத்துமீறல்களில் ஈடுபடுவதினால் பிரச்சினைகள் உருவாகிறது. எவ்வாறெனினும், எல்லையைத்தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை தாக்க வேண்டாம் எனகடற்படையினருக்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## சிறிதரன் எம்...

உறுப்பினர் கொழும்பிலிருந்துள்ளார்.

அதனை அடுத்து ஒரு சில நாட்களின் பின்னர் அங்கு சென்ற அப்பகுதி மக்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து தனது கடமைகளை கவனித்துக்கொண்டு நேற்று மீண்டும் கொழும்புக்கு புறப்பட்டு வந்துவிட்டார்.

அதன் பின்னரே நேற்று மீண்டும் அவரது அலுவலகம் சி.ஐ.டி பொலிஸாரினால் சோதனைக்குள்ளாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஷிராணி பண்டா...

நடைமுறை சட்டக்கோவை மீதான விவாதத்தில் பேசுகையிலே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக்குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை (விசேட ஏற்பாடு) சட்டமூலம் தொடர்பாகவெளியிடப்பட்டுள்ள கருத்துக்களில் எவ்விதமான உண்மையும் இல்லையென அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவரைக் கைது செய்தாலும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கக்கூடிய வகையிலேயே இச்சட்டமூலம் கொண்டுவரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதனை நிராகரிக்கின்றேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-11)

## அச்சுறுத்தல்...

பாதுகாத்து அனைத்து பிரஜைகளும் பழி வாங்குதலுக்கு உட்படும் அச்சம் ஏதும் இன்றி தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை நாம் கோருகின்றோம் என்றுள்ளது. (எ-11)

## லொறி மோதி...

இவர்கள் 3 பேரும் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்கள் தினமும் புதுவைக்கு வந்து கட்டிடத்தொழில் செய்து விட்டு மாலையில் வீடு திரும்புவார்கள். நேற்றுமுன்தினம் மாலை தொழில் முடிந்த பின்னர், ஒரு மோட்டார் சைக்கிளில் 3 பேரும் பயணித்துக்கொண்டிருந்தார்கள்.

சென்னையில்' இருந்து இரசாயனப் பொருள் ஏற்றி வந்துகொண்டிருந்த லொறி அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் 3பேரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், 3 பேருமே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இது தொடர்பாக கோட்க்குப்பம் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக இந்தியஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-11)

## வரவே...

பெறவுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் 15-ம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய செயற்படவுள்ளதாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவேற்பு நிகழ்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என்ற தீர்மானத்தில் எந்த விதமான மாற்றமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மரபு ரீதியாக புதிதாக நியமிக்கப்படும் பிரதம நீதியரசரை வர வேற்கும் நிகழ்வில் இலங்கைச்சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும், சட்டமா அதிபரும் விசேட உரையாற்றுவது வழமையாகும். எனினும் இம்முறை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் இந்த நிகழ்வில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)


**Deutsch, Dutch, French, English**

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

**ஜேர்மன் (டொச்) மொழி**

**கருத்தரங்கு**

திருமணம் மற்றும் Sponsor மூலம் ஜேர்மனி செல்பவர்களுக்கு தூதரகத்தினால் கோரப்படும் ஜேர்மன்- Deutsch A I பரீட்சைக்கான விசேட கருத் தரங்கு நாளை மறுதினம் 25.01.2013 வெள்ளி எமது நிலையத்ததில் நடைபெறவிருக்கின்றது.

ஜேர்மன் கலாச்சார நிலைய (Goethe Institute) அதிகாரிகளினால் நடத்தப்படும் இவ்விசேட கருத்தரங்கில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் இன்றும் நாளையும் எமது நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

- ஏற்கனவே ஜேர்மன் A I பரீட்சை எழுதி சித்தியடையாத வேறு கல்வி நிலைய மாணவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபெறலாம் . (A I பரீட்சையில் எவ்வாறு இலகுவாக சித்தியடைவது பற்றிய விளக்கங் கள் ஜேர்மன் கலாச்சார நிலைய (Goethe institute) அதிகாரிகளினால் இங்கு விளக்கப்படும்)
- ஜேர்மன்- டொச் புதிய பிரிவுகளுக்கான பதிவுகளும் அத்தினமே மேற்கொள்ளப்படுகின்றன.
- மேலும் Netherland (Holland) -Dutch (டச்) மற்றும் French, Italian வகுப்புகளும் ,London செல்பவர்களுக்கான A I ஆங்கில பரீட்சைக்கான வகுப்புக்களும் இங்கு நடை பெறுகின்றன.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி , யாழ்ப்பாணம்

(அரசாங்க ,தூதரக பதிவு பெற்ற மொழிக் கல்விக்கழகம்)

Gov.reg.no- w/a 76795,Tel- Hotline-077484 2464



**INFORMATION TECHNOLOGY PARK**

Jaffna, Sri Lanka.

Under the purview of the

Ministry of Telecommunication & Information Technology

MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

January Batch _ Specially for O/L Students

- Dip.in PC Application & Office Management
- Dip.in Desktop Publishing
- Internet & e-mail (Workshop)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம | - | 01-02-13 |
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | - | 02-02-13 |

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

-Executive Officer-



**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பசுபதி அரசரட்ணம்**



அ.துஷாந்தனின்

அன்புத் தந்தையார்

அமரர் பசுபதி அரசரட்ணம் (புளியங்கூடல்) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள் : தினேஸ், நிருதரன், அருள்குமரன், மகாதேவன், திலீப், சஞ்சீப், தர்சன், செந்தூர்க்குமரன்.

(1558)



**ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்** veta

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட Experts In English Training




**Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 7.00 a.m. | Tue,Thu 8.30 a.m. | Mon, Wed, Fri | Sat, Sun 10.00 a.m. |
| Wed, Fri 3.30 p.m. | Sat, Sun 2.00 p.m | 10.00 a.m. | Tue,Thu 8.30 a.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்வதற்கான A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான)

City & Guilds Approved Centre

IELTS •Unique Test Tips •Latest course Materials

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.115. கஸ்தூரியார் வீதி, (சாயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970 |


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org